# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. IV Issue 8 November 2014

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்

பக்கம்

லைப் டிவைன் . . . . . . . . . . . . . 2

இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . 12

சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . 13

யோக வாழ்க்கை விளக்கம். . . . . . 15

பூரணயோகம் - முதல் வாயில்கள். 18

அஜெண்டா . . . . . . . . . . . . . . . 20

அமெரிக்க வாழ்வின் நிறைவுகளும் குறைபாடுகளும். . . . . . . . . . . 22

அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . 36

அன்பர் அனுபவம் . . . . . . . . . . . 56

**அன்னை இலக்கியம்**

பொறுப்பை என்னிடம் விட்டுவிடு 58

ஜீவியத்தின் ஓசை

அக நிறைவு

அகிலத்தில்

ஆன்மீக நிறைவு



கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

ஸ்ரீ அரவிந்தம்

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

## XXVII. The Sevenfold Chord of Being

Page 265
Para 8

Consciousness is thus omniscient and omnipotent.

It is in entire luminous possession of itself.

This possession is necessarily in its very nature Bliss.
It cannot be anything else.
A vast universal self-delight must be the cause of cosmic existence.
It is the essence and object of cosmic existence.

The ancient seer declared that this delight is our ether.

“If it were not, none could breathe, none could live.”

This self-bliss may become subconscient.
It may be seemingly lost on the surface.

It must be there at our roots.
All existence must be a seeking to discover and possess it.



## 27. சப்த ஜீவன்

சர்வ ஞானம் படைத்ததாகவும் சர்வ வல்லமை பெற்றதாகவும் இருப்பது ஜீவியம்.
அது முழுவதுமாக ஒளி பொருந்திய நிலையில் தன்னைச் சுயமாகப் பெற்றுள்ளது.
அதன் சுய உடைமை பேரானந்தமானது.
அது வேறெதாகவும் இருக்க முடியாது.
ஒரு பரந்த அகிலத்தின் சுய ஆனந்தம், பிரபஞ்ச வாழ்வுக்குக் காரணமாக இருக்க வேண்டும்.
அதுவே பிரபஞ்ச வாழ்வின் சாரமாகவும், நோக்கமாகவும் உள்ளது.
பண்டைய முனிவர்கள் இப்பேரின்பத்தை நம் தூய வான் வெளியாக அறிவித்தனர்.
அது இல்லையென்றால், யாராலும் சுவாசிக்க முடியாது, யாராலும் வாழ முடியாது.
இந்த சுய ஆனந்தம் ஆழ்மனமாக ஆவதாக இருக்கலாம்.
அது வெளிப்பார்வைக்கு மேல்மனதில் மறைந்துள்ளதாகத் தெரியலாம்.
நம் அடித்தளத்தில் அவை இருக்க வேண்டும்.
அதைக் கண்டுபிடித்து அடைவது அனைத்து வாழ்வின் நோக்கமாக இருக்க வேண்டும்.

The creature in the cosmos may find himself in will and power.

He may find himself in light and knowledge.

He may be in being and wideness, or in love and joy.

In whatever way he finds himself, he must awaken.

He awakens to something of the secret ecstasy.

He may awaken to joy of being, delight of realisation of knowledge.

Or he awakens to rapture of possession by will and power.

Or to ecstasy of union in love and joy.

These are the highest terms of expanding life.

They are the essence of its hidden roots.

This expanding life has yet unseen heights.

Page 266
Para 9

The Trinity does not need to throw itself out into apparent being.

Or, if it does so, it would not be cosmic being.

It would simply be an infinity of figures.



பிரபஞ்சத்தில் படைக்கப்பட்டவை உறுதியிலும், திறனிலும் தன்னைக் கண்டறியலாம்.

அவன் தன்னை ஒளியிலும், ஞானத்திலும் கண்டறியலாம்.

அவன் ஜீவனிலும், பரந்த நிலையிலும் அல்லது அன்பிலும் சந்தோஷத்திலும் இருக்கலாம்.

அவன் தன்னை எப்படிக் கண்டுகொண்டாலும், அந்நிலையில் அவன் விழிப்புணர வேண்டும்.

மறைபொருளான ஏதோ ஒரு பரவசத்தை அவன் விழிப்பால் அறிகிறான்.

ஜீவனின் சந்தோஷம் மற்றும் ஞானத்தின் தெளிவை விழிப்பால் அறிகிறான்.

அல்லது அவன் உறுதியாலும் திறனாலும் கைப்பற்றுதலால் எழும் பேருவகையை அறியும் விழிப்புணர்வு பெறுகிறான்.

அல்லது அன்பாலும், சந்தோஷத்தாலும் ஒன்று சேரும் பரவச நிலையை அவன் விழிப்பால் அறிகிறான்.

இவை பரந்து விரியும் வாழ்வின் உயர்ந்த நிலைகளாகும்.

அவை அதன் மறைந்துள்ள அடிப்படையின் சாரமாகும்.

இந்த பரந்து விரியும் வாழ்வு இன்னும் நாமறியாத பல உயர்வுகளைக் கொண்டது.

திரித்துவத்திற்கு தான் ஜீவனாக பார்வைக்கு வெளிப்படும் அவசியம் இல்லை.

அல்லது, அப்படி வெளிப்பட்டால், அது பிரபஞ்ச ஜீவனாகாது.

அது சாதாரணமான ரூபங்களின் ஒரு அனந்தமாகும்.

The fourth term Supermind needs to be brought out.

If not brought out by the Trinity, the figures would have no fixed order.

Supermind is the divine Gnosis.
In every cosmos there must be a power of Knowledge and Will.
This power fixes out of infinite potentiality the determined relations.
It develops the result out of the seed.

It rolls out the mighty rhythms of cosmic Law.

It views and governs the worlds as their immortal Seer and Ruler.
This power is nothing else than Sachchidananda Himself.

It creates nothing which is not in its own self-existence.

All cosmic Law is not imposed from outside.

It is from within.
All development is self-development.
All seed and result are seed of a Truth of things.
The result of that seed is determined out of its potentialities.



நான்காவது நிலையான சத்திய ஜீவியத்தை வெளிக் கொணர வேண்டும்.
திரித்துவத்தால் அவைகளை வெளியில் கொண்டு வராவிட்டால், ரூபங்கள் ஒரு நிலையான ஒழுங்கைப் பெறாது.
சத்திய ஜீவியம் ஒரு தெய்வீக மறையியல் ஞானமாகும்.
ஒவ்வொரு பிரபஞ்சத்திலும் ஞானம், உறுதிக்கான திறன் இருக்க வேண்டும்.
இத்திறன் தன் அனந்தமான ஆற்றல் வளத்தின் மூலம் தொடர்புகளின் நிர்ணயத்தை முடிவு செய்கிறது.
விதையிலிருந்து அதன் வளர்ச்சிக்கான பரிணாமத்தை உருவாக்குகிறது.
வலிமைமிக்க ஒலி நயம் பொருந்திய பிரபஞ்ச சட்டத்தை அமல் செய்கிறது.
உலகத்தை மரணமிலா நிலை எய்திய ஞானி போலவும், அரசர் போலவும் அது பார்வையிடுகிறது மற்றும் ஆள்கிறது.
இத்திறன் சச்சிதானந்தம் தானே செயல்படுவதன்றி வேறில்லை.
படைப்பில் உள்ளவை அனைத்தும் அதன் சுய இருப்பிலிருந்து எழுந்தவையே. அதனுள் இல்லாதது எதுவும் இங்கில்லை.
எல்லா பிரபஞ்ச சட்டமும் வெளியிலிருந்து சிருஷ்டிக்குள் திணிக்கப்பட்டவை அல்ல.
உள்ளிருந்து எழுந்தவையே.
எல்லா வளர்ச்சியும் அதன் சுய வளர்ச்சியே.
எல்லா விதையும் பயனும் சத்தியத்தின் கருவே ஆகும்.
விதையின் பலன் அதன் உள்ளாற்றலால் நிர்ணயிக்கப்படுகிறது.

For the same reason, no Law is absolute.
Only the infinite is absolute.
Everything contains within itself endless potentialities.

They are quite beyond its determined form and course.

They are determined through a self-limitation by Idea.

The Idea proceeds from an infinite liberty within.

This power of self-limitation is inherent.

It is in the boundless All-Existent.
The Infinite can assume a manifold finiteness.
Otherwise it would not be the Infinite.
The Absolute has a boundless capacity of self-determination.
It is in knowledge and power and will and manifestation.
Otherwise it would not be the Absolute.

This Supermind then is the Truth or Real-Idea.

It is inherent in all cosmic force and existence.

It is necessary to determine and uphold relation and order.

It upholds the great lines of the manifestation.



அந்தக் காரணத்தால், எந்தச் சட்டமும் முழுமையானதல்ல.
பரம்பொருள் மட்டுமே முழுமையானது.
அனைத்தும் தனக்குள்ளே முடிவிலா உள்ளாற்றலைக் கொண்டுள்ளன.
அவை நிர்ணயிக்கப்பட்ட உருவம் மற்றும் வழியைக் கடந்துள்ளன.
சுயக் கட்டுப்பாட்டுக்கான எண்ணத்தால் அவை நிர்ணயிக்கப்பட்டுள்ளன.
அவ்வெண்ணம் அதற்குள்ளே உள்ள அனந்தமான சுதந்திரத்திலிருந்து வெளிப்படுகிறது.
சுய கட்டுப்பாட்டிற்கான திறனை அது இயல்பாகவே பெற்றுள்ளது.
வரம்பில்லாத பரம்பொருளினுள் அது உள்ளது.
அனந்தம் பலவான அணுவாக தன்னைக் கருத முடியும்.
இல்லையென்றால் அது அனந்தமாக இருக்க முடியாது.
பரம்பொருள் தன் சுய நிர்ணயத்தை மேற்கொள்ளும் வரம்பில்லாத ஆற்றல் கொண்டது.
அது ஞானம், திறன், உறுதி மற்றும் வெளிப்பாட்டில் உள்ளது.
இல்லையென்றால் அது முழுமையான பரம்பொருளாக இருக்க முடியாது.
இந்தச் சத்திய ஜீவியம் சத்தியம் அல்லது முழு எண்ணம் எனப்படும்.
அது எல்லா பிரபஞ்ச சக்தியிலும், வாழ்விலும் இயல்பாக உள்ளது.
தொடர்பு, ஒழுங்கு முறை இவற்றை நிர்ணயம் செய்யவும், அவற்றை தாங்கிப் பிடிக்கவும் அது அவசியமாகிறது.
அது வெளிப்பாட்டிற்கான சிறந்த முறையை நிலைநிறுத்துகிறது.

The Vedic Rishis described in their language Sachchidananda.
Existence, Consciousness and Bliss are the three highest hidden Names.
They are the names of the Nameless.
So also, this Supermind is the fourth Name.
It is fourth to THAT in its descent
It is fourth to us in our ascension.

## ஜீவிய மணி

இறைவன் இடைவிடாது செயல்படுவது அற்புதம். ஆனால் மனிதன் மனத்தில் இறைவன் செயல்படுவதில்லை. அருள் மனிதனை நாடி வரும் போது, மனிதன் நாடுவது சுவையே. சுவை அருளை விலக்கும். சுவையை ஏற்று அதில் அமிழ்ந்தால் சுவை மனிதனை அழிக்கும். மனிதனுடைய சுயநல ஆசைகளைப் பூர்த்தி செய்வதைத் தம் பரநலமான இலட்சியமாக ஸ்ரீ அன்னை ஏற்றார். அவர் அருளைப் பூவுலகில் சொர்க்கமாக மனிதன் அனுபவிக்க வழங்குபவை இரண்டு: அபரிமித அதிர்ஷ்டமும், அளவற்ற பாதுகாப்பும். ஆனால் மனிதன் ஆர்வமுடன் நாடுவது அருளன்று. ஆன்மீக இலட்சியமும் அன்று. அவன் தற்பெருமையை, வீண்பெருமையை நாடுகிறான்.



வேத ரிஷிகள் தங்கள் மொழியில் சச்சிதானந்தத்தை விவரித்தார்கள்.
ஜீவன், ஜீவியம், ஆனந்தம் என்ற மூன்று உயர்ந்த மறைபெயர்கள் அவை.
பெயரற்றதன் பெயர்கள் அவை.
அது போல், சத்திய ஜீவியம் என்பது நான்காவது பெயர்.
அது தன் இறங்கும் நிலையில் நான்காவதாக உள்ளது.
நம் உயரும் நிலையில் அது நான்காவதாக உள்ளது.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சத்து, சித்து, ஆனந்தம் என்பவை சச்சிதானந்தம். சத் உடலாகவும், சித் வாழ்வாகவும், ஆனந்தம் ஆன்மா (சைத்திய புருஷன்) வாகவும், சத்திய ஜீவியம் மனமாகவும் சிருஷ்டியில் மாறுகின்றன. நம்வாழ்வில் ஆனந்தத்தை அறியக்கூடியது ஆன்மா. ஆன்மா ஆணவ மலத்தால் பீடிக்கப்பட்டுள்ளது. ஆணவம் கரைந்தால் ஆன்மா அதிலிருந்து விடுபடுகிறது. அதன்பின் ஆன்மா மீது மனம் எனும் திரை உள்ளது. மனம் மௌனமானால் மேல்மனம் விலகும். மனம் சிந்திப்பதை மறுத்தால் சிந்தனையிலிருந்து ஆன்மா விடுபடும். சிந்திக்கும் திறனையே மனம் இழந்தால் ஆன்மா மனத்திலிருந்து விடுபடும். மனத்திலுள்ள சைத்திய புருஷன் (mental psychic) வெளிவருவான். அவன் ஆனந்தத்தைப் பெறுவான். ஞானிகள் பெற்ற இன்பத்தைவிட இது ஒரு படி அதிகமானது.

## இம்மாதச் செய்தி

# யோகம் அகம் ஏற்ற மௌன யாத்திரை





**Page 166: Defending his small life from the Invisible.**
**அறியாத அனந்தம் ஆட்கொள்வதைத் தடுக்கும்.**

- ✡ அவனது ஜீவன் அனந்தத்துடன் தொடர்புள்ளது
- ✡ தன் ஆழ்ந்த ஆழத்தில் பிரம்மத்தில் அவன் தன்னை மறைத்து வைத்தான்
- ✡ மறைந்துள்ள பிரம்மத்திடமிருந்து தன்னைக் காப்பாற்றினான்
- ✡ சிறு வாழ்வு வாழ அவன் ஜீவன் பிறந்துள்ளது
- ✡ குறு மேடையில் நடக்கும் சிறு நாடகம்
- ✡ சிறிய மனையில் அவன் வாழ்வு கொட்டாரமடித்தது
- ✡ அகண்ட வானின் நட்சத்திரங்களின் அடியில்
- ✡ எழுந்த வாழ்வின் சிறந்த மகுடம்
- ✡ அது சிருஷ்டியின் வேதனை பெறும் பலன்
- ✡ இதுவே உலகம் தரும் பலன், இயற்கையின் முடிவான இயல்பு
- ✡ இதுவே அனைத்துமானால், மேலும் எதுவுமில்லையெனில்
- ✡ காண்பது காண வேண்டியதின் முழுமையானால்
- ✡ நாம் செல்ல வேண்டிய நிலை இதுயில்லையெனில்
- ✡ ஜடத்திலிருந்து பரமாத்மாவுக்கு செல்வது நம் பாதை
- ✡ உலகை சிருஷ்டித்த ஜோதி, அனைத்தின் மூலம்
- ✡ நம் குறுகிய மனத்தை எடுத்துக் கூறும்
- ✡ வாழ்வே காலம் ஏற்படுத்தியது

✡ அது மாயை, தோற்றம், தவறி நடந்தது
✡ சிருஷ்டிக்கும் எண்ணத்தின் முடிவான முரண்பாடு
✡ இல்லாத எதிர்முனைகளிடையே உலவும்
✡ ஜடமான சக்தி அறிய முனைந்து போராடி
✡ மனத்தால் அறிய முனையும் ஜடம்
✡ ஜடத்தின் இருள் பயங்கரப் பிரசவத்தால் ஈன்றெடுக்கும் ஆன்மா
✡ அத்தனையும் தோற்றம், தூரத்துக் கனவு
✡ எண்ணம் எழுப்பும் எழுத்தோவியத்துள் நாம் வாழ்கிறோம்
✡ வழிப்போக்கனின் கற்பனை உணர்வில் ஒட்டி எழுந்தது
✡ மூளை எனும் கருவியின் முகப்பில் பதிந்த
✡ பிரபஞ்ச நித்திரையின் கனவுலக சந்தர்ப்பம்
✡ நிலவொளியில் நடக்கும் ஏவல் செய்யப்பட்டவன்
✡ அஞ்ஞானக் கனவின் அகந்தை ரூபம் நடந்து வரும்
✡ ஆவியுலக காலத்தைக் கடக்கக் காத்திருந்து
✡ காரண காரியத்தைப் பொய்யாக மாற்றி
✡ உலகமெனும் இல்லாத அரங்கை உன்னிப் பார்த்து
✡ காட்சிகளினின்று தொடர்ந்து மாறும்
✡ எங்கேயென அறியாமல், எந்த அதிர்ஷ்டம் எனத் தெரியாமல்

**ஜீவிய மணி**

தரித்திரம் வெற்றி பெற்றால் லாட்டரி ஜெயிக்கும்.



## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/13. கர்மம் கரைய ஜீவனையடைபவர் சாதனை மௌனமானது; எழுந்த எண்ணம் பேசப்படாமல் சாதிப்பதே சாதனை

காலத்தைக் கடக்கும் யோகம் இதுவரை காலம் சாதித்ததை இப்பொழுது சாதிக்கும்.

யோகம் சாதனையைக் கடப்பது, மனிதன் யோக அவசியத்தைக் கடப்பது.

- பெரும் சாதனைகளை மேள தாளத்துடன் வரவேற்பதில்லை.
- உலகம் இதுவரை காணாத சாதனை பிப்ரவரி 29, 1956. அது நிகழ்ந்ததை உலகம் அறியாது.
- அதற்காக வாழ்வை அர்ப்பணம் செய்த ஆயிரக்கணக்கானவர் அறியவில்லை.
- அதை அறிய ஓர் அன்பர் விழைவாரானால், அந்தச் சக்தியுடன் அவர் சூட்சும எண்ணம் தொடர்பு கொள்கிறது.
- அத்தொடர்பு அவர் வாழ்நாளில் சாதித்த அனைத்தையும் இன்றே சாதிக்கும்.
- உலக வாழ்வில் இது அடிக்கடி நடப்பதுண்டு. அரசியலில் நிகழ்வதை உலகம் அறியும்.
- அவை அதிர்ஷ்டம் என்ற பெயரால் விலகுகின்றன.
- அதிர்ஷ்டம் என்றவுடன் நமக்குப் புரியாது, தானே நடக்க வேண்டும், நமக்கில்லை, ஜாதகத்திலில்லை என மனம் கூறும்.

**ஜாதகத்தைக் கடந்த ஆத்ம சக்தியிது.**
**எப்படி ஜாதகத்திலிருக்கும் எனத் தோன்றாது.**

- ஜோஸ்ய சாத்திரப்படி துறவி, இறந்தவர் ஜாதகத்தைப் பார்க்கக் கூடாது.

- நம்பிக்கை எழுந்தால் அதைக் குறிக்கும் அறிகுறிகள் எழும்.
- தான் செய்யும் சிறு தொழிலில் ஒரு சரக்கு வந்து எட்டு வருஷமாகப் பெற்ற இலாபம் கிடைக்கும்.
- இதை இலாபமாக அறிவது ஜட மனம்.
- இதை சகுனமாக அறிவது சூட்சுமமான மனம்.
- இது இந்தத் தத்துவத்தைக் கூறும் சகுனம் என அறிவது மனம் சூட்சுமமாக இருப்பது.
- நாம் செய்தால் பலிக்கும் எனத் தோன்றுவது ஜீவன் பெற்ற சூட்சுமம்.
- அவர் இந்தத் தத்துவத்தை விபரமாக அறிந்து, அறிந்ததை உணர்ந்து, செயல்படுத்த முடிவு செய்தால் அவர் ஆரம்பிக்கும்முன் வாழ்வு அதை ஆரம்பிக்கும்.
- முயன்றால் சிறு முயற்சிக்குப் பெரும் பலன் வரும்.
- மனிதன் ஆரம்பித்தால் ஊர் அவன் செயலை ஏற்று அவனுக்காகப் பூர்த்தி செய்து அது பெரும் பலன் தரும்.
- ஊரைக் கடந்துள்ள வாழ்வும் அவன் வேலையை ஏற்று அவனுக்காக அளவுகடந்து பூர்த்தி செய்யும்.
- இந்த யோகத்தின் அடிப்படை காலம் சுருங்குவது.
- இதுவரை எல்லா யோகங்களும் பல ஜென்மத்தை இதே பிறப்பில் செய்து முடிப்பதாகும்.
- காலம் என்ற யோகத்தில் நீண்ட நாள் சுருங்குவது காலத்தை வெல்வது.
- பூரண யோகம் காலத்திலில்லை.
- காலத்தைக் கடந்த யோகத்தில் எதுவும் க்ஷணத்தில் முடியும். அது ஒரு முறை நடக்கும்.
- காலத்துள் காலத்தைக் கடந்தது செயல்படும் மூன்றாம் நிலைக்காலம் பூரண யோகத்திற்குரியது.
- புறம் அகமாகி, கீழ் மேலாகும் நிலையிது.



- இந்த நிலையில் யுகம் க்ஷணமாகும், நிலையாக நடக்கும்.
- நிலையாக எதுவும் க்ஷணத்தில் நடப்பது பூரண யோகம்.
- இதுவரை 40 ஆண்டுகள் வாழ்வில் சம்பாதித்தது இன்றே பெறக்கூடியது. அதனால் இனிவரும் 50 ஆண்டுகள் வருமானமும் இன்றே வரும். இரண்டும் சேர்ந்தும் வரும். தொடர்ந்து வந்தபடியுமிருக்கும்.
- மனம் வருமானத்தைக் கருதாதது அதைக் கடந்த யோக நிலை.
- யோக நிலைக்குரியது யோகப் பலன். வாழ்க்கை பலனான காரியம் கூடி வருவதில்லை.
- யோகப் பலனைக் கருதும் மனமும் காரியத்தைக் கருதும் மனம்.

**காரியத்தை விலக்கி கூடி வருவதைக் கருதலாம்.**

**கூடி வருவது முறை (process).**

**முறையைக் கடந்தது சாரம்.**

**முறையையும் மனம் கடந்தால் சாரம் எழும்.**

**எல்லா விஷயங்களிலும் சாரத்தை அடைவது பிரம்ம ஞானம்.**

- பிரம்மம் செயலாக எழுவது வாழ்வு.
- செயலைப் பிரம்மமாக அறிவது ஞானம்.
- பிரம்ம ஞானம் உலகில் எழுவது பிரம்ம ஜீவியம்.
- காலத்தைக் கடப்பது ஆத்மா. ஆத்மாவைக் கடப்பது பிரம்மம். பிரம்மத்தை வாழ்வில் காண்பது பூரண யோகம்.

## ஜீவிய மணி

அன்னை தரும் அருளைப் பொருளாகப் பெற்றவன் தான் அதிர்ஷ்டம் பெற்றதாக நினைக்கிறான்.

## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### *106. இருண்ட சக்திகள் உருவம் பெற்று எதிர்ப்பது.*

- சிறிய மனிதனுக்குச் சிறிய எதிர்ப்பு.
- பெரிய மனிதனுக்குப் பெரிய எதிர்ப்பு.
- பாராட்டும் அது போலவே.
- உள்ளூர் பாராட்டு, உலகப் பாராட்டு, அதையும் கடந்த பாராட்டு, அவற்றைக் கடந்தவர்க்குண்டு.

  ''**இவர் வாழும் உலகில் நாமும் வாழ்வது பாக்கியம்**'' என்று ஐன்ஸ்டீன் மகாத்மாவைப் பற்றிக் கூறியது காலத்தைக் கடந்த பாராட்டு.
- எளிய மனிதன் தன்னைக் காப்பாற்றிக் கொள்வான்.
- மிகப் பெரிய மனிதன் உலகத்தில் மேதைகளைத் தேடுவான்.

  ஐஸன்ஹவர் அப்படித் தேடி எடுக்கப்பட்டவர்.

  ராதாகிருஷ்ணன் பெரியவர் கண்ணில்பட்டுத் தேறியவர்.

  **A.B.** புராணி என்பவர் பகவான் வரலாறு எழுதியவர். தீவிர தேச பக்தர். புரட்சிவாதி. குஜராத்திலிருந்து 1920 வாக்கில் புதுவை வந்து பகவானைப் புரட்சி செய்ய ஆசீர்வாதம் கேட்டார்.

  ''**யோக பாக்கியமிருக்கிறது. யோகம் செய்**'' என்றார் பகவான்.

  நேருவைக் காந்தி தேர்ந்தெடுத்தார்.
- பாராட்டுப் பெரியதானாலும், எதிர்ப்புப் பெரியதானாலும்

  **ஆத்மா பெரியது எனப் பொருள்.**
- எவருக்கும் புரியவில்லை எனப் பேர் பெற்ற நூல் ஒன்றிருந்தால் அது உலகப் பேரிலக்கியமாகும்.

  **The Life Divine** இதுவரை அப்பெயர் பெற்றுள்ளது.



- ஊரில் சிலர் திருடினால் ஊருக்குக் கெட்ட பெயர். அனைவரும் திருடும் ஊரானால், சூட்சும தத்துவப்படி அவ்வூர் பெரும் சுபீட்சம் பெறும் என்று சட்டம் கூறுகிறது.
- ஒரு கல்லூரியில் ஊழல் ஓரளவு இருந்தால் திருத்துவார்கள். முழுவதும் ஊழலானால் சர்க்கார் எடுத்துக் கொள்வார்கள்.
- எதற்கும் உதவாத பையன் ஊரை விட்டு ஓடி பெரிய மனிதனாவான்.
- கல்யாண வயது கடந்து பல ஆண்டாகிறது என்றால் அன்னை அதிர்ஷ்டம் வந்தால் அவளால் அவளுக்கும் அனைவருக்கும் அனைத்தும் கூடி வரும்.
- இந்தியா சுதந்திரம் இழந்து, சுபீட்சமிழந்து, அறிவை இழந்து, நாணயத்தை இழந்து, நல்லதை இழந்து, அனைத்துமிழந்த நிலையிலிருப்பது,

**அனைத்தையும் அதிகபட்ச அளவில்**
**பெறும் வாய்ப்பு எனப்படும்.**

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சைத்திய புருஷன் என்பது முழுமையான ஆன்மா. ஜீவாத்மாவின் பிரதிநிதி. அது சித்தித்தால் மனிதன் தன் வாழ்வு என்றும் பசுமையாக இருப்பதைக் காண்பான். உடலுக்கு வயோதிகம் வாராது. உணர்வு சிறு பிள்ளையைப் போலிருக்கும். 96 வயதில் அன்னை 15 வயது சிறுமியைப் போல் சிரிப்பார். மனம் மலரும் பொழுதுள்ள தீட்சண்யம் எப்பொழுதுமிருக்கும். தியான நிலை ஆத்மாவுக்கு நாள் முழுவதும் நிலைத்திருக்கும். எங்கும் எதிலும் எப்பொழுதும் பசுமை நிலைத்திருக்கும்.

## அஜெண்டா

**நிக்ஸன் விலக வேண்டும் என்று அன்னை கூறினார். அவர் விலக்கப்பட்டார்.**

Volume 13, page 163

- ஒரு நாட்டு வாழ்க்கையை அதற்குரிய உண்மையின்படி அறிய முடிவதில்லை.
- 1800-இல் இங்கிலாந்து, 1900-இல் ஜப்பான் உலகமறியாத சிறு நாடுகள்.
- வியாபாரம் இங்கிலாந்தைப் பிரபலமாக்கியது.
- ஹாலந்து வியாபாரம் அதைவிடப் பெரியதானாலும் இங்கிலாந்து போல் பிரபலமாகவில்லை.
- 1900-இல் ஜப்பான் வலிமையான சிறு நாடு, உலகம் அதை அறியாது.
- 1905-இல் ரஷ்யாவைத் தோற்கடித்ததால் உலகம் ஜப்பானை அறியும்.
- 1950-க்குப் பின் ஜப்பான் அமெரிக்காவைக் காப்பியடித்து வளமான நாடாகி விட்டது.
- 1700-க்கு முன் நாகரீகம் பாரசீகம், இந்தியாவிலிருந்தது.
- ஐரோப்பா நாகரீகமற்ற நாடாகவே விளங்கியது.
- ரோம சாம்ராஜ்யம் 500 ஆண்டுகள் ஐரோப்பாவை ஆண்டு, பின்னர் அழிந்தது.
- கிருஸ்து பிறப்பதன் முன் கிரீஸ் ஞானத்தந்தையாக விளங்கி மறைந்தது.
- **இது போன்ற முன்னேற்றங்களில் நாட்டை உருவாக்கும் தலைவர்கள் எழுவார்கள்.**
- நாட்டை அழிக்கும் தலைவர்களும் உருவாவார்கள். நிக்ஸன், பூட்டோ அப்படிப்பட்டவர்.
- தான் செய்யும் வேலைக்குக் குந்தகமாக எழும் தலைவர்களையே அன்னை விலக்க முயல்வார்.



- மொரார்ஜி தேசாய் ஆசிரமத்திற்குச் சர்க்கார் அளிக்க முன் வந்த கிராண்டை எதிர்த்தார்.
- அன்னை அவர் விலக வேண்டும் என நினைத்தார்.
- நாடு முன்னேறும்பொழுது நாட்டு சக்திகள் உருவம் பெறும், விவசாயம், வியாபாரம், கல்வி பெருகும்.
- பெருகுவதைவிட அவை ஒரு சக்தியான உருவம் பெறும்.
- அவை அதற்குரிய மனிதனை உண்டு பண்ணும்.
- 1940-இல் நாட்டில் விடுதலை வீரர்கள் எழுந்தனர்.
- ஏனெனில் விடுதலை இயக்கம் உருவாகியிருந்தது.
- அதுவே 1910-இல் இல்லை என பகவான் குறைப்பட்டார்.
- 2010-இல் நாட்டில் கல்வி ஸ்தாபனங்கள் வளரும் சூழல் அபரிமிதமாக உள்ளது.
- 1960-இல் கல்வியைப் பற்றி நாட்டில் பேசினால் எடுபடாது.
- கென்னடி உலகச் சேவைக்குரியவர்.
- நிக்ஸன் உலக அழிவுக்கு ஆதரவு தருபவர்.
- பர்மாவுடன் இந்தியாவை ஒப்பிட்டுப் பார்த்தால் காந்திஜீயும், நேருவும், காங்கிரஸும் செய்த சேவை தெரியும்.
- **அவற்றின் பின்னணியில் பகவான் இருந்ததை உலகம் அறியாது.**
- பர்மாவுக்குச் சுதந்திரப் போராட்டப் பரம்பரையில்லை.
- ஆங்ஸான் இந்தியாவைப் பிற்காலத்தில் பின்பற்றி ஓரியக்கம் ஏற்படுத்தி நாட்டில் பதவிக்கு வந்தார்.
- கொஞ்ச நாளில் அது ராணுவ ஆட்சியாகி விட்டது.
- அதுவே ஆசிய நாடுகளுக்குரிய முறையாகிறது.

### ஜீவிய மணி

**அடுத்தவர் நல்ல குணத்தை வியந்து பாராட்டுவது தெய்வீகம்.**

# அமெரிக்க வாழ்வின் நிறைவுகளும் குறைபாடுகளும்

மூலம்: ஸ்ரீ கர்மயோகி
விரிவாக்கம் மற்றும் சொற்பொழிவு: திரு. அசோகன்
சொற்பொழிவாற்றிய தேதி: 15. 08. 2014

இன்று உலகளவில் அமெரிக்க மோகம் பரவியுள்ளது. அதுவும் குறிப்பாக இந்தியாவில் அதிகமாகவே உள்ளது. இரண்டாம் உலகப்போருக்கு முன்னால் இந்தியர்கள் ஆங்கிலேயர்களை முன்மாதிரியாக வைத்துக் கொண்டு வாழ்ந்தார்கள். அதாவது மேடைப்பேச்சு என்று வந்தால், ஆங்கிலத்தில்தான் பேசுவார்கள். பேண்ட்டோடு கோட் போட்டுக்கொண்டு இருப்பதைக் கௌரவமாகக் கருதினார்கள். காலை வணக்கம் சொல்வதைக்கூட good morning என்றுதான் சொல்வார்கள். பெரியவர்களை Sir என்றும், பெண்களை Madam என்றும் அழைத்துக் கொண்டிருந்தார்கள். இரண்டாம் உலகப்போருக்குப்பின் சில ஆங்கிலப் பழக்கவழக்கங்கள் குறைந்து, அமெரிக்கப் பழக்கவழக்கங்களுக்கு மாறிவிட்டார்கள். Hello-விற்குப் பதிலாக, Hi வந்து விட்டது. கோட், சூட் போய் ஜீன்ஸ் மற்றும் T Shirt வந்து விட்டது. அமெரிக்கப் பாணியில் I.T. கம்பெனிகளில் இன்று Boss-யே பெயர் சொல்லி அழைக்கின்றனர். இப்படிப் பேச்சில், பழக்கவழக்கங்களில் அமெரிக்கப் பாணி வெளிப்படுவதோடு மட்டுமல்லாமல், வாழ்க்கையில் மற்ற பல இடங்களில் அமெரிக்கத் தாக்கம் நன்றாகவே தெரிகிறது. கல்யாண மார்க்கெட்டில் அமெரிக்க I.T. கம்பெனிகளில் வேலை செய்யும் வரன்களுக்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. அவர்களுக்குமுன், மற்ற வரன்கள் எடுபடாமல் போகிறது. 1990-க்கு முன்னால், ஊரில் ஏதோ ஒன்றிரண்டு குடும்பங்களில் இருந்துதான் பிள்ளைகள் அமெரிக்காவிற்குப் போயிருப்பார்கள். ஆனால், இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. ஏகப்பட்ட நடுத்தர குடும்பத்துப் பிள்ளைகள் அமெரிக்காவில் படிக்கிறார்கள், அமெரிக்காவில் வேலை செய்கிறார்கள். அல்லது அமெரிக்கா-விலேயே settle-ஆகி விட்டார்கள் என்ற பேச்சு அடிபடுகிறது.



விசா கட்டுப்பாடு என்ற ஒன்று மட்டும் இல்லை என்றால், அதாவது யார் வேண்டுமானாலும் அமெரிக்காவில் settle-ஆகி விடலாம் என்று இருந்தால், இன்று குக்கிராமங்களில் இருப்பவர்கள்கூட வீடு, நிலத்தை எல்லாம் விற்று, flight ticket வாங்கிக் கொண்டு அமெரிக்கா சென்று settle-ஆகி விடுவார்கள் போலிருக்கிறது.

இந்த அளவிற்கு அமெரிக்க மோகம் பரவி இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை நாம் ஆராய வேண்டும். மேற்பார்வை-யாகப் பார்த்தால், அமெரிக்கா பணக்கார நாடு. அதனால் அங்கு சென்று குடியேற எல்லோரும் பிரியப்படுகிறார்கள் என்று புரிந்து கொள்ளலாம். நாம் அதோடு நிறுத்திக் கொள்ள முடியாது. இந்த சுபீட்சத்திற்குப் பின்னாலுள்ள காரணங்களை நாம் ஆராய்ந்து அறிய வேண்டும். அது தெரிய வரும்போது, நம் நாட்டு மக்கள் ஏன் அதுபோலில்லை என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். தூரத்திலிருந்து பார்க்கும்போது அமெரிக்கா குறையே இல்லாத நாடாக நமக்குத் தெரிகிறது. அப்படியே அங்கு நடக்கும் கெட்ட விஷயங்களைப்பற்றி நாம் செய்தித்தாளில் படித்தாலும், நாம் அதையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. பெரிய மனிதனின் குறைகள் நம் கண்ணில் படாததுபோல, பணக்கார நாடுகளின் குறை-களெல்லாம் நம் மனதில் படுவதில்லை என்றும் சொல்லலாம். இப்படி மோகத்தால் பீடிக்கப்படாமல், நடுநிலைமையில் இருந்து கொண்டு ஆராய்ச்சி செய்பவருக்கு அமெரிக்காவின் நிறைகளும், குறைகளும் கண்ணில்படும். அப்படி நம் கண்களில்படுகின்ற ஒரு சில விஷயங்களை நாம் இப்போது பட்டியலிட்டுப் பார்க்கலாம்.

### 1. அமெரிக்கா பணக்கார, சுதந்திரமான நாடு:

முதலில் நம் கண்ணில்படுவது இந்நாடு பணக்கார நாடு என்பதாகும். பொதுவாக எந்த நாட்டிலும் பணக்காரர்கள் குறைவாகவும், ஏழைகள் அதிகமாகவும்தான் இருப்பார்கள். ஆனால் இவ்விஷயத்தில் இந்த நாடு வித்தியாசமாக உள்ளது. அதாவது இந்நாட்டிலொரு 10% பெரும் பணக்காரர்களாகவும், மற்றும் 10% வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களாகவும்

மீதமுள்ள 80% இந்த இரண்டு வகுப்பிலும் சேராத நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். இப்படி ஓர் பெரிய நடுத்தர வர்க்கத்தை உருவாக்கியதுதான் இது ஒரு பணக்கார நாடாகக் காட்சி அளிப்பதற்கே காரணமாக அமைந்துள்ளது. 10% பெரும் பணக்காரர்கள் என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அவர்களுடைய வாழ்க்கை, வசதிகள் என்பது நாம் கற்பனையே செய்ய முடியாத அளவிற்கு அமைந்துள்ளது. ஒரு கோடி டாலர்கள் சொத்து மதிப்புள்ளவர்கள் இந்தப் பணக்காரப் பட்டியலில் அடங்குவார்கள். ஒரு கோடி டாலர் என்றால் இந்திய ரூபாயில் 60 கோடி ரூபாய் என்று கணக்கு வருகிறது. தொழிலதிபர்கள், கம்பெனி **CEO**-க்கள், மற்றும் பிரபலமான **Lawyers, Doctors, Auditors**, திரைப்படக் கலைஞர்கள் போன்றவர்கள் இதில் வருவார்கள். இவர்களுடைய வீடுகள் பிரம்மாண்டமான அளவில் இருக்கும். நம் நாட்டில் வீட்டில் அனைவரும் இருசக்கர வாகனம் வைத்துள்ளதுபோல் அவர்கள் அனைவரும் வீட்டில் எத்தனை பேர்கள் உள்ளனரோ அத்தனை கார்கள் வைத்திருப்பார்கள். குட்டி விமானங்களை வைத்துக் கொண்டு இங்குமங்கும் போவதெல்லாம் இவர்களுக்கு சகஜம். இவர்களுடைய பிள்ளைகளை எடுத்துக் கொண்டால், நம்முடைய பெற்றோர்கள்தான் பெரும் பணக்காரர்கள் ஆயிற்றே நாம் ஏன் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும் என்று இவர்கள் வாழ்க்கையைச் சுலபமாக எடுத்துக் கொள்வதில்லை. பெரும் பணக்காரர்கள் வீட்டுப் பிள்ளைகள்கூட 14, 15 வயது ஆகி-விட்டது என்றால் பாக்கெட் செலவிற்காக நியூஸ் பேப்பர் போடுவது, ஹோட்டலில் சர்வர் வேலை செய்வது, பெட்ரோல் பங்கில் பெட்ரோல் போடுவது போன்ற வேலைகளைச் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். நம் நாட்டில் ஒரு பணக்கார வீட்டுப்பிள்ளை இம்மாதிரியான வேலைகளையெல்லாம் செய்தால், பெற்றோர்கள் அதை மிகவும் கௌரவக் குறைவாக நினைப்பார்கள். ஆனால் அங்கேயோ இத்தகைய வேலைகளை பெற்றோர்களே வரவேற்கிறார்கள். நம் நாட்டில் பெரும் பணக்காரர் இருந்தால், அவர் சொத்து முழுவதையும் தனக்கு எழுதி வைப்பார் என்று பிள்ளைகள் எதிர்பார்ப்பார்கள். இந்த எதிர்பார்ப்பு இளைய தலைமுறைக்கு இருக்கும். அப்படி எழுதி



வைக்காவிட்டால் பெரிய தகராறு, சண்டைகள் எல்லாம் வரும். ஆனால் அங்கு இப்படியெல்லாம் இல்லை. பெற்றோர்கள் அவர்கள் சொந்த முயற்சியில் சம்பாதித்த சொத்து என்று தெரிந்தால், அவர்கள் என்ன கொடுக்கிறார்களோ அதை வாங்கிக் கொள்ளும் பக்குவத்தைப் பிள்ளைகள் வளர்த்துக் கொள்கிறார்கள். உதாரணமாக பில்கேட்ஸ் அவர்களை எடுத்துக் கொண்டால் அவருக்கு ஐம்பது பில்லியன் டாலர் சொத்து இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்திய ரூபாயில் அவருடைய சொத்து மதிப்பு மூன்று லட்சம் கோடி. அவரைப் பத்திரிகை நிருபர்கள் பேட்டி கண்டபோது அவர் தன்னுடைய மூன்று பிள்ளைகளுக்கும் ஆளுக்கு 200 மில்லியன் டாலர்தான் தருவதாக இருக்கிறேன். அதற்குமேல் கொடுத்தால் அவர்கள் கெட்டுவிடுவார்கள் என்று சொன்னாராம். ஐம்பது பில்லியன் என்றால் ஐம்பதாயிரம் மில்லியனாகிறது. இந்த ஐம்பதாயிரம் மில்லியனில் அவர் பிள்ளைகளுக்குக் கொடுக்க விரும்புவது வெறும் அறுநூறு மில்லியன்தான். அதாவது 1¼%-க்கும் குறைவாகத்தான் வருகிறது. ஆனால் அவருடைய பிள்ளைகள் இதை ஏற்றுக் கொள்கிறார்கள். நம் நாட்டு கோடீஸ்வர பிள்ளைகள் இதை ஏற்பார்களா என்பது சந்தேகம்.

அமெரிக்காவில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் 10% பேர்கள் இருக்கிறார்கள். இவர்களையும் நம் நாட்டில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருப்பவர்களையும் சமமாக நாம் கருத முடியாது. அங்கே வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருப்பவர்கள்கூட கார், டி.வி., பிரிட்ஜ் என்ற எல்லா வசதிகளுடன் இருப்பார்கள். இங்கே அரசாங்கம் இப்படிப்பட்டவர்களுக்கு எல்லாவற்றையும் இலவசமாகக் கொடுப்பதுபோல் அங்கேயும் அரசிடமிருந்து **welfare assistance** என்று மாதாமாதம் கிடைக்கும். இந்திய ஏழைக்கும், அமெரிக்க ஏழைக்கும் வித்தியாசம் என்ன-வென்றால், நம் நாட்டு ஏழைகள் அரசாங்க உதவியே போதும் என்று திருப்தி அடைந்துவிடுகிறார்கள். அதற்குமேல் தான் வாழ்க்கையில் உயரவேண்டும் என்று சொந்த முயற்சி எதுவும் எடுப்பதில்லை. ஆனால் அமெரிக்க நாட்டு ஏழைகள் அப்படி அரசாங்க தயவிலிருப்பதை மிகவும் அகௌரவமாகக் கருதுகிறார்கள். அப்படிக் கருதுவது அதிர்ஷ்டத்திற்கு ஒரு

வகையில் ஆதரவாக அமைகிறது. அடுத்ததாக அமெரிக்க முன்னேற்றத்திற்கு அங்கு நிலவும் சுதந்திரமான சூழ்நிலை ஒரு முக்கிய காரணமாகும். மேல்ஜாதி, கீழ்ஜாதி என்ற வித்தியா-சங்கள் அங்கு இல்லை. ஏனென்றால் ஜாதி அமைப்பே அங்கு இல்லை. 1960-வரை கறுப்பின மக்கள் குறைவாக நடத்தப்-பட்டார்கள். ஆனால் அதன்பின் அந்தப் பாகுபாடும் போய் விட்டது. இப்போது வெள்ளையர்களுக்குச் சமமாக நீக்ரோ மக்களும் சுதந்திரமாக நடமாடுகிறார்கள். பெண்களுக்கு இந்திய சமுதாயம் பலவிதமான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. உதாரணமாக கணவனுக்கு அடங்கியிருக்க வேண்டும், அடுத்ததாக மாமியாருக்கு அடங்கியிருக்க வேண்டும், பெரியதாகச் சாதிக்க வேண்டும் என்றெல்லாம் ஆசைப்படக் கூடாது. இத்தகைய கட்டுப்பாடுகளெல்லாம் பெண்களுக்கு அங்கே இல்லை. கூட்டுக் குடும்ப வாழ்க்கையே மிகவும் அரிதான ஒரு விஷயமாக இருப்பதால், அங்கு மாமியாருடன் மருமகள் சேர்ந்து ஒரே வீட்டில் இருக்க வேண்டிய அவசியமே ஏற்படுவதில்லை.

அடுத்ததாக அமெரிக்கக் கல்விமுறை சுதந்திரத்தை வளர்க்கும் வகையில் அமைந்துள்ளது. நம் நாட்டில் மாணவன் ஆசிரியரைக் கேள்விக் கேட்டாலே அவர் கோபப்படுவார். அதுவும் அவர் சொல்வதற்கு மாற்றுக் கருத்தை மாணவன் வெளியிட்டால் ஆசிரியருக்கு இன்னும் கோபம் அதிகமாகும். ஆனால் அங்கே ஆசிரியரே மாணவனை ஏதேனும் கேள்விகள் உண்டா என்று கேட்கத் தூண்டுவார். மாற்றுக் கருத்து யாரேனும் வைத்திருந்தால் அதை வெளியிடலாம் என்று வெளிப்படை-யாகவேக் கேட்பார். இப்படிப்பட்ட சுதந்திரமான சூழ்நிலையில் படிக்கும் மாணவர்கள் creative-வாக சிந்தனை செய்யக் கற்றுக் கொள்கிறார்கள். அது அவர்களுடைய முன்னேற்றத்திற்கு ஒரு முக்கியக் காரணமாக அமைகிறது. பெரிய American Corporation-களில் கீழ்மட்டத்தில் வேலையில் சேர்பவர்கள்கூட மேல்மட்டத்திற்குயர கம்பெனி பாலிசியே ஆதரவு தருகிறது. இந்தியாவில் ஒரு கம்பெனியில் கீழ்மட்டத்தில் ஒருவர் வேலையில் சேர்ந்து மேலே முன்னுக்குவர முயன்றால், போட்டி, பொறாமை என்று எத்தனையோ தடைகள் எழும்பி



வரும். அதையெல்லாம் முறியடித்து அவர் மேலே வருவதற்குள் அவர் ரிடையராகும் வயதே வந்துவிடும். அமெரிக்காவில் நிறைய பேர்கள் சுலபமாகப் பணம் சம்பாதிப்பதற்குக் காரணமே அங்கு நிலவும் சுதந்திரமான சூழ்நிலைதான். இங்கே புதியதாக ஒரு கம்பெனி ஆரம்பிக்க வேண்டும் என்றால், ஏகப்பட்ட அரசாங்க விதிமுறைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். அதையெல்லாம் பூர்த்தி செய்து கம்பெனி ஆரம்பிப்பதற்குமுன் தொழிலதிபர் துவண்டேபோய்விடுகிறார். அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் சிலிக்கான் valley என்றொரு கம்ப்யூட்டர் சிட்டியுள்ளது. புதிய கம்பெனியை ஆரம்பிப்பவர்-களெல்லாம் அங்கேதான் ஆரம்பிக்கிறார்கள். நம் நாட்டில் நிலவும் கெடுபிடிகளெல்லாம் அங்கேயும் இருந்தால் இவ்வளவு அசுர வேகத்தில் அங்கு சிலிக்கான் valley வளர்ந்திருக்க முடியாது. சிலிக்கான் valley செயல்பட்டுக் கொண்டிருப்-பதால்தான் ஆப்பிள் கம்பெனி உலகிலேயே முதன்மையான கம்பெனியாக தலையெடுத்துள்ளது. இவ்வாறு படிப்பில் சுதந்திரம், வேலையில் சுதந்திரம் என்று இரண்டு சுதந்திரமும் சேர்ந்து அமெரிக்காவை மிகவும் முன்னேறிய நாடாக மாற்றி விட்டது.

2. **அமெரிக்கர்கள் புது idea-க்களுக்கு மிகவும் receptive-ஆக இருப்பார்கள்:**

அமெரிக்க மக்கள் புது idea-க்களை மறுக்கவோ, உதாசீனப்படுத்தவோ மாட்டார்கள். நம் நாட்டில் புது ஐடியாக்களுக்கு வரவேற்பே இருப்பதில்லை. யாரேனும் புதிய கருத்து ஒன்றைத் தெரிவித்தால், அவர்கள்மேல் நமக்கு எரிச்சல்-தான் வருகிறது. உதாரணமாக 1970-ஆம் ஆண்டில் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் தனியார் வங்கிகளைத் தேசியமய-மாக்கலாம் என்று கருத்துத் தெரிவித்தபொழுது, நாடு முழுவதும் அதற்கு எதிர்ப்பு கிளம்பியது. இதெல்லாம் நடக்கிற காரியமில்லை. தேசியமயமாக்கினால் அவ்வங்கிகள் எல்லாம் படுத்துவிடும், deposits குறைந்துவிடும் என்று அவ-நம்பிக்கையை எழுப்பினார்கள். ஆனால் இந்திராகாந்தி அவர்கள் எல்லா எதிர்ப்புகளையும்மீறி எல்லா வங்கிகளையும்

அரசுடமையாக்கினார். அப்படி அவர் செய்தது நாளடைவில் நாட்டிற்கு நல்லது என்று நிரூபணமாகியது, **deposits** குறைந்துவிடும் என்ற எதிர்பார்ப்புக்கு மாறாக **deposits** பல மடங்கு பெருகி லட்சகணக்கான கோடிகளில் குவிந்திருக்கிறது.

மக்களுடைய எதிர்ப்பிற்கு பயந்து இந்திரா அவர்கள் பின்வாங்கியிருந்தால், நாட்டின் முன்னேற்றம் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கும். நம் நாட்டில் பெரிய பட்டம் வாங்கியவர்கள் தம்மைவிடக் குறைந்த பட்டம் வாங்கியவர்களிடம் கற்றுக்கொள்ள விஷயம் இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஆனால் மதர்ஸ் சர்வீஸ் சொசைட்டியைச் சேர்ந்த ஓர் அன்பரிடம் **American Management Association**-உடைய **Vice President**-ஆக செயல்பட்டவர் **Society Management**-இல் மேனேஜ்மெண்ட் துறையில் ஆன்மீக அணுகுமுறைகள் என்றொரு புதிய விஷயம் இருக்கிறது என்று கேள்விப்பட்டு, அதைப்பற்றி தெரிந்துகொள்ள இந்தியாவிற்கே கிளம்பி வந்துவிட்டார். இத்தனைக்கும் சொசைட்டியில் இருந்த அன்பர் **Management** நிபுணருடைய படிப்பைவிட குறைந்த படிப்புத்தான் படித்தவர். அது தெரிந்தும்கூட இந்த அமெரிக்க நிபுணர் அதைப் பெரிதுபடுத்தாமல், இவருடைய கல்வித்தகுதி எனக்கொரு பொருட்டில்லை. இவரிடம் விஷயம் இருக்கிறது என்று எனக்குப் புரிகிறது. அதை நாடியே நான் இங்கு வந்துள்ளேன் என்று பெருந்தன்மையாக பதிலளித்தார். 1970-ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்தே இந்திய ஆன்மீகத்தில் தாங்கள் தேடிக் கொண்டிருக்கிற உண்மைகளும் விடைகளும் இருக்கின்றன என்று புரிந்துகொண்ட ஏராளமான அமெரிக்க இளைஞர்கள் இந்திய குருமார்களின் ஆசிரமங்களை நோக்கி வருகிறார்கள். இது நிச்சயம் அவர்களின் பரந்த மனப்பான்மையைக் காட்டுகிறது. ஆப்பிள் **computer** நிறுவனத்தின் ஸ்தாபகர் **Steve Jobs** இப்படி ஆன்மீகத்தைத் தேடி இந்தியாவிற்கு வந்தவர்தாம். புத்த மதத்தின் அணுகுமுறைகளால் ஈர்க்கப்பட்டு, பௌத்த முறைகளைப் பின்பற்றி, எப்படி **intuition** உள் எழுச்சி **(inspiration)** அடைவது என்று கண்டறிந்தார். இந்த **intuition** காரணமாகத்தான் வாடிக்கையாளர்களின் மனதைக் கவரும் வகையில் புதுப்புது **IPad** டிசைன்கள் உருவாக்குவது



எப்படி என்பதைக் கண்டுபிடித்தார். இந்திய கம்பெனிகளில் மேல்நிலையில் இருப்பவர்கள் எவருமே தனக்குக் கீழ்நிலையில் இருப்பவர்கள் கம்பெனி வளர்ச்சிக்கு ஒரு நல்ல யோசனை கூறினாலும், உன்னிடம் கேட்டுக் கொள்வது எனக்கு கௌரவமாக இல்லை என்று சொல்லி தட்டிக் கழித்து விடுவார்கள். இதனாலேயே கீழ்நிலையில் உள்ளவர் எவரும் மேலே உள்ளவர்களுக்கு எந்தப் புதிய யோசனையையும் வழங்குவதில்லை. ஸ்ரீ கர்மயோகி அவர்கள் ஆரம்ப காலத்தில் ஆசிரியர் பணியிலிருந்தார். அப்போது அவர் தன்னுடைய தலைமை ஆசிரியரை அணுகி நீங்கள் நிறைய நெல் வயல் வைத்திருக்கிறீர்கள். வயலைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் தென்னங்கன்றுகளை நட்டு வைத்தீர்களென்றால், அவை வளர்ந்து, நன்றாகக் காய்த்து, அதன் மூலம் உங்களுக்கு உபரி வருமானம் கிடைக்கும் என்று சொன்னார். தலைமை ஆசிரியரோ ‘இது நல்ல யோசனையாக இருந்தாலும், என்னிடம் வேலை பார்க்கும் ஆசிரியர் நீங்கள், அதனால் இந்தக் கருத்தை ஏற்று செயல்படுவதற்கில்லை’ என்று பதிலளித்தார். ஸ்ரீ கர்மயோகி அவர்கள் அதிர்ச்சியடைந்து, அதிர்ஷ்டத்திற்கு ஒருவர் வழிகாட்டினாலும், இப்படி கௌரவப் பிரச்சனையால் இந்த வருமானம் வேண்டாம் என்கிறாரே, இது என்ன விந்தையாகயிருக்கிறது என்று வியந்தார்.

நமக்குத் தெரிந்ததைத் தவிர வேறு உண்மை இருக்கலாம் என்பதைப் புரிந்துக் கொள்வதே நமக்குக் கடினம். ஆனால் அமெரிக்கர்கள் இப்படிப்பட்ட நம்பிக்கையை வளர்த்துக் கொண்டுள்ளனர். அவர்களிடம் ஒரு தீராத பிரச்சனையைக் கொண்டு வந்தால், இதற்குத் தீர்வே இல்லை என்ற இந்தியர்களின் முடிவை அவர்கள் ஏற்க மாட்டார்கள். இப்போதைக்கு நம் கண்களுக்குத் தீர்வு இல்லை என்று தெரிகிறது. ஆனால், தொடர்ந்து முயற்சி செய்தோமென்றால், இதுவரை நம் கண்களுக்குப் புலப்படாத தீர்வு ஒன்று நம்மறிவிற்குப் புலப்படும். ஆகவே அதுவரையில் நம் முயற்சியைத் தளரவிடக் கூடாது என்பார்கள். நம் நாட்டவர்களுக்கு கர்மத்தின்மேல் நம்பிக்கை இருப்பதால், ஒரு பிரச்சனையை நம்மால் தீர்க்க முடியவில்லை என்றால், அதெல்லாம் கர்மபலன் நாம் ஒன்றும்

செய்வதற்கில்லை என்று கையை விரித்து விடுகிறோம். செவிடாகப் பிறக்கும் குழந்தைகள் சரியாகப் படிப்பதில்லை என்றால், அதைக் கர்மபலன் என்று இந்தியப் பெற்றோர்கள் கைவிட்டுவிடுகிறார்கள். ஆனால், சென்ற நூற்றாண்டில் அமெரிக்காவில் செவிடான பிள்ளைகளுக்கு உதவும் வகையில், அவர்கள் புரிந்துகொள்ளக் கூடிய சைகை பாஷை ஒன்றை உருவாக்கி அதன்மூலம் அப்படிப்பட்ட குழந்தைகளுக்கும் கல்வியறிவை வழங்க ஏற்பாடு செய்தார்கள். இப்படி எந்தவிதமான பிரச்சனைக்கும் தீர்வுண்டு என்ற நம்பிக்கை, **infinity**-யை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்று காட்டுகிறது. ஒரு விஷயம் **Finite**-ஆக இருக்கும்போது அதற்கொரு எல்லையுண்டு. முடிவுண்டு. அதற்குமேல் நாம் ஒன்றும் செய்ய முடியாதென்று ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் ஒரு விஷயம் **infinite**-ஆக இருக்கும்போது, அதற்கு வரம்போ, முடிவோ இல்லை என்றாகிறது. அப்பட்சத்தில் நாம் இதுவரை பார்த்திராத அம்சங்கள் திடீரென வெளிப்பட்டு, அது ஒரு நல்ல தீர்வாகவும் அமையும். உதாரணமாக சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் பெரியம்மைக்குத் தீர்வே கிடையாது. அது வந்தால், அனுபவிக்க வேண்டியதுதான். மாரியம்மன் கோபத்திலிருந்து மனிதன் தப்பிக்க முடியாது என்றெல்லாம் பேசினார்கள். மேற்கத்திய நாட்டவர்கள் இதை ஏற்றுக்கொள்ளவே இல்லை. மற்ற வியாதிகளைபோல் இதுவும் ஒரு வியாதிதான். முயற்சி செய்தால் குணப்படுத்தலாம் என்று முடிவு செய்தார்கள். அவர்கள் முயற்சிக்கு நல்ல பலனும் கிடைத்து, தடுப்பூசியையும் கண்டுபிடித்தார்கள். இதன் விளைவாக இன்று உலகம் முழுவதுமே பெரியம்மை ஒழிக்கப்பட்டுவிட்டது.

வாழ்க்கை அறிவிற்குக் கட்டுப்பட்டுள்ளது. அறிவு என்ன முடிவு செய்கிறதோ அதைத்தான் வாழ்க்கை சாதிக்கும். நம்முடைய அறிவு சோம்பல், இயலாமை, கர்மபலன் போன்றவற்றால் நிறைந்துள்ளது. ஆனால் அமெரிக்கர்களுடைய அறிவோ முயற்சி, முன்னேற்றம், **dynamism** ஆகியவற்றால் நிறைந்துள்ளது. எங்கு ஒரு எல்லையை அவர்கள் சந்தித்தாலும், அதைத் தாண்டலாம் என்று அவர்கள்



நினைக்கிறார்கள். அதுவே நாமாக இருந்தால், அந்த எல்லைக்குள் அடங்கியிருக்க விரும்புகிறோம். இதுவே அவர்களுக்கும் நமக்குமுள்ள பெரிய வித்தியாசம்.

3. **புரட்சியும், Self-reliance-உம் அமெரிக்க ரத்தத்தில் ஊறியுள்ளன. எந்த வேலையாக இருந்தாலும் அவர்களுக்குத் தானே செய்கின்ற பழக்கமுண்டு:**

நம் நாட்டில் வீட்டில் ஏதேனும் ரிப்பேர் வேலை என்று வந்து விட்டால், **electrician**-ஐக் கூப்பிடுவோம், **plumber**-ஐக் கூப்பிடுவோம். அவர்கள் வந்து சரி செய்யும்வரை அந்த வேலைகள் அப்படியே இருக்கும். ஆனால் அமெரிக்கர்கள் இம்மாதிரி நடந்து கொள்வதில்லை. எல்லா வீட்டு ரிப்பேர் வேலைகளையும் அவர்களே செய்யப் பழகிக் கொள்கிறார்கள். **Fan** மாட்டுவது, புதிய பல்பு கனெக்ஷன் தருவது, புதிய பைப் லைன் இழுப்பது, மீட்டர் சரி செய்வது என்று இம்மாதிரி வேலைகளை அவர்களே செய்யப் பழகிக் கொள்கிறார்கள். இம்மாதிரி வேலைகளை எப்படிச் செய்ய வேண்டும் என்பதற்கே **"Do it yourself"** என்ற **guideline** புத்தகங்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட புத்தகங்கள் இல்லாத அமெரிக்க வீடுகளே இல்லை என்று நாம் சொல்லலாம். அமெரிக்கர்களுக்கு 1960-ஆம் ஆண்டில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த வாழ்க்கை சலித்து விட்டது. அக்காலக் கட்டத்தில் பணம் சம்பாதிப்பது ஒன்றுதான் அமெரிக்கக் குடிமகன்களின் லட்சியமாக இருந்தது. பெரிய வீடு கட்டிக் கொள்ள வேண்டும், பெரிய கார்களை வைத்துக் கொள்ள வேண்டும், தாராளமாகச் செலவு செய்து வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் என்றுதான் இருந்தார்கள். ஆனால், அந்தக் காலத்திலிருந்த அமெரிக்க இளைஞர்களுக்கு இதில் எந்தச் சிறப்பும் இருப்பதாகத் தோன்றவில்லை. வாழ்க்கைக்கும் ஒரு அர்த்தம் வேண்டும். பணத்தைவிட சிறந்ததாக ஏதேனுமொன்று இருக்க வேண்டும். அதை மையமாக வைத்து நம் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து வழக்கமான வாழ்க்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, வித்தியாசமான புது வாழ்க்கையைத் தேடினார்கள். அப்படித் தேடிய

பொழுதுதான் இந்திய ஆன்மீகத்தில் அவர்கள் தேடியதற்கு விடை இருக்கிறதென்று அறிந்து அந்த ஆன்மீகத்தைத் தேடி இந்தியாவிற்கு ஏராளமாக வந்தனர்.

அப்படி இந்திய ஆன்மீகத்தில் தன்னுடைய தேடுதலுக்கு விடை கிடைக்கும் என்று நம்பி இந்தியாவிற்கு வந்தவர்தான் ஆப்பிள் கம்ப்யூட்டர் நிறுவனரான **Steve Jobs**. பௌத்த மத தியானத்தில் அவருக்கு ஈடுபாடுண்டு. அவர் தியானத்தின் மூலம் **intuition**-ஐ வளர்த்துக் கொண்டார். மக்களுக்குப் பிடித்த வகையில் **Ipad** மற்றும் **Ipod** கண்டுபிடிப்பதற்கு இந்த **intuition** அவருக்குப் பெரிதும் உதவியது. இரண்டாம் உலகப்போருக்கு முன்னால் உலகப் பொருளாதாரமே வீழ்ச்சி கண்டிருந்தது. எப்படி பொருளாதாரத்தை மீண்டும் சுறுசுறுப்பாக்குவது என்று வழியே தெரியாமல் உலகத் தலைவர்கள் திணறிக் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில்தான் ஆங்கிலப் பொருளாதார நிபுணர் **J. M. Keynes** என்பவர் பொருளாதார வீழ்ச்சி காலங்களில் அரசாங்கம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பது சரியில்லை என்றும் பொருளாதாரத்தில் தலையிட்டு மக்களுக்கு வேலைவாய்ப்புகளை அரசாங்கமே உருவாக்கித்தர வேண்டும் என்றும் வாதிட்டார். இந்தக் கருத்து மிகவும் புரட்சிகரமான கருத்தாக இருந்தது. பொருளாதாரத்தில் தலையிடுவதையே அறியாத அமெரிக்க அரசாங்கத்திற்கு இது பெரிய அதிர்ச்சியாக இருந்தது. **Keynes** அவர்கள் சொல்வது மிகவும் **original**-ஆன யோசனையாகும். ஒருவருடைய **originality**-யை அதேமாதிரியான **originality** கொண்ட மற்ற ஒருவரால்தான் பாராட்ட முடியும். அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த **F. D. Roosevelt** அவர்கள் **Keynes**-ஐப் போலவே **originality** உள்ளவர். ஆகவே இந்தக் கருத்தை அவர் வரவேற்று, ரோடு போடுதல், பாலம் கட்டுதல், காடுகளை அழித்தல், வாய்க்கால் வெட்டுதல் போன்ற பொதுப்பணி வேலைகளைத் தொடங்கி மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கினார். 1970-இல் பதவி வகித்த ஜனாதிபதி **Carter** அவர்கள் **FDR**-ஐப் போலவே **originality** உள்ளவர். உலக நாடுகளின் பொருளாதார அமைப்புகள் **Gold standard** என்பதோடு இணைக்கப்பட்டிருந்தன. இந்த முறையின்படி ஒரு நாட்டின்



கரன்சியின் மதிப்பு அந்த தேசத்திலுள்ள **Gold reserve**-வை ஒத்ததாகும். அதிகமாக **reserve** வைத்திருந்தால் அதிக மதிப்பும், குறைவாக **reserve** வைத்திருந்தால் குறைந்த மதிப்பும் கிடைக்கும் என்றாகிவிட்டது. இந்த முறையின்படி பார்க்கும்போது ஒரு நாடு மிகுந்த உற்பத்தித் திறனுள்ள நாடாக இருந்தாலும், **Gold reserve** குறைவாக இருந்தால், அந்நாட்டின் கரன்சியின் மதிப்பு குறைவாகத்தானிருக்கும். உலகப் பொருளாதார முறையை **Gold standard system** சரியாகப் பிரதிபலிக்கவில்லை. ஆகவே இந்த **Gold standard**-ஐ எடுத்துவிடலாம் என்று ஒரு புரட்சிகரமான முடிவை எடுத்து அமல்படுத்தியவரே ஜனாதிபதி **Carter** அவர்கள்தான். இப்படிச் செய்ததால் உலக நாடுகளின் கரன்சிகள் அந்தந்த நாட்டின் உற்பத்தித் திறனை மட்டும் பிரதிபலிக்கின்றனவே தவிர, அந்தந்த நாட்டின் **Gold reserve**-களை இல்லை. இப்படிப் பலவகைகளில் அமெரிக்கர்கள் தங்கள் **originality**-யை வெளிப்படுத்துகிறார்கள் என்றால் அவர்களை நாம் பாராட்டித்தான் ஆகவேண்டும்.

**4. அமெரிக்கர்கள் செய்வதைப் பெரிதாகச் செய்வார்கள்:**

இந்தியா சுதந்திரம் அடைந்தபொழுது நாட்டின் ஜனத்தொகை 30 கோடியாகும். ஆனால் பல்கலைக்கழகங்கள் வெறும் 27-தான் இருந்தன. அதேசமயத்தில் அமெரிக்க ஜனத்தொகை வெறும் 20 கோடியாகவும், ஆனால் பல்கலைக்கழகங்கள் மட்டும் 800-ஆகவும் இருந்தன. ஒரு பல்கலைக்கழகத்தில் 8000 முதல் 10000 மாணவர்கள் இருந்தார்கள். ஆனால் ஒரு சராசரி இந்தியப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் எண்ணிக்கை 2000 அளவில்தான் இருந்தது. இரண்டாம் உலகப்போர் தொடங்கிய பொழுது அமெரிக்க ராணுவத்தில் 16000 வீரர்கள்தான் இருந்தார்கள். ஆனால் போர் சூடுபிடிக்க ஆரம்பித்தவுடன் இந்த 16000 வீரர்கள் எண்ணிக்கையில் 40 லட்சமாக உயர்ந்தார்கள். அதாவது வெறும் ஆறு மாத காலக்கட்டத்திலேயே இராணுவத்தின் வளர்ச்சி 250 மடங்காக அதிகரித்தது. மேலும் மூன்று மாதத்திற்கு ஒரு கப்பல் என்று தயார் செய்து கொண்டிருந்தவர்கள் தங்களுடைய உற்பத்தியின் வேகத்தை அதிகரித்து, ஒரு நாளைக்கு ஒரு கப்பல் என்று

**delivery** செய்ய ஆரம்பித்து விட்டனர். எப்படி அவர்கள் சாதித்தார்கள் என்பது புதிராகவே உள்ளது.

1980-90 போன்ற வருடங்களில் சென்னையிலுள்ள 12 அடுக்குள்ள **L.I.C Building**-ஐக் காணும்போது நமக்கு மலைப்பாக இருந்தது. ஆனால் அமெரிக்கர்களோ 1940-லேயே 70, 80 அடுக்குகளைக் கொண்ட மாடிக் கட்டிடங்களைக் கட்ட ஆரம்பித்து விட்டனர். நம் நாட்டில் பில்லியன் டாலர் கம்பெனிகள் இப்போதுதான் அறிமுகமாகியுள்ளன. ஆனால் அங்கோ 20, 30 வருடங்களுக்கு முன்னாலேயே **Ford Company, General Motors, Microsoft, IBM** போன்ற பில்லியன் டாலர் கம்பெனிகள் வந்து விட்டன. **General Motors Company**-யின் வருடாந்திர பட்ஜெட் செலவுகள் ஸ்ரீலங்கா, நேப்பால் போன்ற சிறிய நாடுகளுடைய பட்ஜெட்டைவிடப் பெரியது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். அதாவது அந்த கம்பெனிகள் அந்த நாடுகளை விலைக்கு வாங்கிவிடும் அளவிற்கு வல்லமை படைத்துள்ளது. நம் நாட்டில்தான் 300, 400 ஏக்கர் அளவிலான எஸ்டேட் என்றாலே பிரமிப்பாகப் பார்க்கிறோம். இம்மாதிரி பண்ணைகளில் வேலை செய்வதற்கே நமக்கு 40, 50 ஆட்கள் தேவைப்படுகிறது. எஸ்டேட் முழுவதும் நீர் பாய்ச்ச வேண்டும் என்றால், அதற்கு நாள் முழுவதும் தேவைப்படுகிறது. ஆனால் அமெரிக்காவில் 10000, 20000 ஏக்கர் அளவிலுள்ள எஸ்டேட்-களை சுமார் 10, 20 பேர்கள்தான் நிர்வாகம் செய்கிறார்கள். எஸ்டேட் முழுவதும் **drip irrigation** முறை - சொட்டுநீர் பாசனத்திற்கான பைப்புகளையும் பிளாஸ்டிக் குழாய்களையும் பொருத்திவிடுகிறார்கள். பம்ப் செட்டை **on** செய்தவுடன் இந்த குழாய்களின் மூலமாகவே எஸ்டேட் முழுவதும் நீர் பாய்ச்சப்-படுகிறது. 300 ஏக்கர் எஸ்டேட்டை நிர்வாகம் செய்யவே நமக்கு 50 பேர்கள் தேவைப்படும்போது, நியாயமாகப் பார்த்தால், 10000 ஏக்கர் எஸ்டேட்டை நிர்வாகம் செய்ய குறைந்தபட்சம் 1000 பேர்களாவது தேவைப்படும். ஆனால் அமெரிக்கப் பண்ணைகளில் அப்படிச் செய்வதில்லை. அன்றாட நிர்வாகத்தை 10, 20 பேர்கள்தான் செய்கிறார்கள். அறுவடை நாட்களாக இருந்தால், பெரிய **harvester machine** வந்துவிடுகிறது. அறுவடையை அவைகள் செய்கின்றன. அதாவது 50



**machine**-கள் களத்தில் இறங்கினால், அதனை ஓட்டுவதற்கு 50 **drivers** இருக்கிறார்கள்.

நம் நாட்டில் சென்னை, பெங்களூர் போன்ற மாநகரங்களில் ஒரு நாளைக்கு 100, 200 விமானங்கள் வந்து இறங்கினாலே பெரிய விஷயமாக இருக்கிறது. ஆனால், **Newyork, Chicago** போன்ற பெரிய நகரங்களில் நிமிடத்திற்கு ஆறு அல்லது ஏழு விமானங்கள் வந்து இறங்குவதாகச் சொல்கிறார்கள். இந்தியாவில் இன்றைய காலகட்டத்தில், ஆயிரம் பேர்களுக்கு 40 கார்கள்தான் உள்ளன. இதுவே நமக்குக் கார்களின் எண்ணிக்கை மிகவும் பெருகி விட்டதாகத் தெரிகிறது. ஆனால் அமெரிக்காவிலோ 1000 பேர்களுக்கு 700 கார்கள் உள்ளன. **Traffic Jam** என்றால், இரண்டு அல்லது மூன்று மைல்கள் தூரத்திற்கு கார்கள் ஒன்றன்பின் ஒன்றாக சாலைகளில் நிற்பதைப் பார்க்கலாம். நம்மால் கற்பனை செய்ய முடியாத காரியங்களையும் அவர்கள் சுலபமாகச் சாதிக்கிறார்கள். 1870-ஆம் ஆண்டளவில் தாழ்வான பகுதியில் கட்டப்பட்ட ஒரு ஹோட்டலையே நாம் காருக்கு **jack** வைத்துத் தூக்குவதைப்போல் அந்த கட்டிடத்திற்குக்கீழ் **jack** வைத்து கட்டிடத்தையே தூக்கினார்கள். இத்தனைக்கும் ஹோட்டல் வழக்கம்போல் இயங்கலாம் என்றும் சொல்லிவிட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு டெக்னாலஜியே நம் நாட்டிற்குக் கடந்த ஓரிரு வருடங்களாகத்தான் அறிமுகமாகி உள்ளது. அதாவது 1870-இல் அவர்கள் சாதித்ததை 2014-இல்தான் நம்மால் நினைக்கவே முடிகிறது.

தொடரும்...

## ஜீவிய மணி

*நம் சுயநலம் 100% என்பது நமக்குத் தெரியும். இல்லை என நினைப்பது தவறு. பேசுவது பாவம். 100% தன்னலமற்ற முறையில் நடக்கத் தாமே முன் வராதவர் மாற்றத்தைத் தேடுதல் பலன் தராது.*

# அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

***12. சுத்தம்:***

சுத்தம் புறத் தூய்மை, அகத் தூய்மை என இரு பகுதிகளாகும். இரண்டும் இருந்தால் சிறப்பு. வாழ்க்கையில் அது முழு யோகம். அகத் தூய்மை மிக உயர்ந்தது. அதை நான் இங்கு எடுத்து விளக்கவில்லை. புறத் தூய்மையை மட்டுமே குறிப்பிடுகிறேன். அதற்குரிய சிறப்பை விளக்கவே இப்பகுதியில் முயல்கிறேன். **(purity of atmosphere)** வீட்டுச் சூழலில் தூய்மை என்றும் ஒன்றுண்டு. அன்னையின் திருவுருவப்படம் அந்தத் தூய்மையை வளர்க்கும். தெய்வச்சிலை, படங்கள் அதை வளர்க்கும். குட்டிச்சாத்தானை வணங்கினால், சித்து விளையாடு-பவர்களுடன் தொடர்புகொண்டால் அந்தத் தூய்மை கெட்டு, இருளின் சூழல் ஏற்படும். பிறருக்குத் தீங்கு செய்யும் மந்திரப் பிரயோகங்கள் உள்ளவர்களுடன் தொடர்பு கொண்டால், அவர்கள் சம்பந்தப்பட்ட பொருட்கள், படங்கள் வீட்டிலிருந்-தால், அன்னையின் திருவருள் அங்குச் செயல்படாது. அப்படியே செயல்பட்டாலும் மிகக்குறைந்த பலனையே தரும்.

வீட்டில் புறத் தூய்மை என்றால் என்ன என்பது எளிமையான கேள்வியாகத் தோன்றுகிறது. அன்னையின் சக்தி **(Mother's Force)** சத்தியஜீவிய சக்தியாகும் **(Supramental Force)**. அது ஓர் இடத்தில் வர, வந்து நிரந்தரமாகத் தங்க, புறத் தூய்மை **(physical cleanliness)** அத்தியாவசியம். இது எவ்வளவு முக்கியமானது, கடினமானது என்பதை விளக்க ஒரு நிகழ்ச்சியைச் சொல்லு-கிறேன். ரூ.25 இலட்சம் செலாவணியுள்ள கம்பெனி முதலாளியின் மனைவி கல்லூரிப் பேராசிரியர். அவர்களுடைய வீட்டில் முக்கிய விருந்து நடந்த அன்று உள்ளே நுழைந்தவுடன் நமக்கு அறிமுகமானது 'அழுக்கு வாடை'. வீட்டில் பல நாட்களாகச் சேர்ந்துள்ள தூசி, அழுக்கு, அழுக்குத் துணிக்குவியல், இவை எல்லாவற்றையும் மறைத்து வைத்தாலும் தாங்கள் இருப்பதை அறிவிக்க அவை வாடை மூலம் நம்மை வந்தடைகின்றன.

கையை வைத்த இடங்கள் தூசியில்லாமல் இருப்பது என்பது எத்தனை வீடுகளில் இருக்க முடியும்? நம் வீட்டிற்கு அந்தத் தகுதி உண்டா? சுவரில் மாட்டியுள்ள படங்களைத் தொட்டுப் பார்த்தால், விரலால் கோடிட்டுப் பார்த்தால், நாம் எத்தனை நாளைக்கு ஒரு முறை அந்தப் படங்களைச் சுத்தம் செய்கிறோம் என்பது நினைவுக்கு வரும். ''குடித்தனம் செய்யும் பெண்ணின் சுத்தத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அலமாரிக்கு அடியில் பார்த்தால் தெரியும்'' என்பார்கள். நாம் தினமும் குளிக்கின்றோம். சிலர் தலையில் தினமும் தண்ணீர் விட்டுக் கொள்வார்கள். தலைமுடி நீளமாக இருப்பதால் தமிழ்நாட்டுப் பெண்கள் தினமும் தலையை நனைப்பதில்லை. வங்காளத்தில் அந்தப் பழக்கம் உண்டு. தலையை தினமும் நீராட்டாவிட்டால் தலையில் அழுக்கு சேர்வது இயல்பு. வீட்டைப் பெருக்கு-கிறோம். ஆனால் வீட்டில் உள்ள மேஜை, நாற்காலிகளைத் தட்டுகிறோம். அவற்றில் உள்ள தூசி நாம் பயன்படுத்துவதால் அகற்றப்படுகிறது. தினமும் மேஜை, நாற்காலி, படம், அலமாரி, இவற்றை நாம் சுத்தம் செய்வதில்லை. அதிகக் குப்பை சேர்ந்தால் சுத்தம் செய்கிறோம். படங்களுக்குப் பின்புறம், சோபா சீட்டிற்கு அடியில், அலமாரிக்குப் பின்புறம் ஒட்டடை சேரும். எண்ணெய் பொருட்கள் உபயோகிக்கப்படுவதால், பெஞ்சு, ஸ்டூல், முதலியவற்றில் அழுக்கு படை படையாக ஒட்டிக்கொண்டு இருக்கும். சமையல் அறை ஆசாரமானவர்கள் வீடுகளில் சுத்தமாக இருக்கும். மற்ற வீடுகளில் சுத்தமாக இருக்காது. **(store room)** சாமான்கள் அறை ஒரு வீட்டில் சுத்தமாக இருந்தால், அதை மிகச் சுத்தமான வீடாக நாம் கருதலாம். ஜன்னல், கதவு, மேஜைக்கு அடிப்புறம் முதல் ஆரம்பித்து ஸ்டோர் அறை வரை எல்லா இடங்களையும், எல்லாப் பொருட்களையும், எல்லா நேரத்திலும் சுத்தமாக வைத்துக் கொள்ளும் அவசியத்தை நாம் உணர வேண்டும். உணர்ந்-தவர்களுக்கு ஒரு பிரச்சனை. ஆபீஸ் வேலை, குடும்பப் பொறுப்பு, மற்ற காரியங்களை நிறைவேற்றியபின், இந்த

அளவு வீட்டில் தூய்மையை நிலைநிறுத்த முடியுமா என்பது கேள்வி. என்னுடைய பதிலுக்கு இரு பகுதிகள் உண்டு. 1. இந்த அளவு தூய்மையை நம் இன்றைய அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக நிறைவேற்றுவது இயலாத காரியம். 2. தூய்மையை நாம் அன்னையின் வழிபாடாக ஏற்றுக்கொண்டு அதை நிறைவேற்ற கங்கணம் கட்டிக்கொண்டால், நம் அத்தியாவசியமான வேலைகள் எதற்கும் குந்தகமின்றி நிறைவேறும். அத்துடன் நம் அத்தியாவசியமான வேலைகள் சிறப்புறும். என் இரு பதில்கள் முரணானவைபோல் தோன்றுகின்றன. முரண்பாட்டை நீக்கி, விளக்கம் கொடுக்கிறேன்.

பொதுவாக நாம் ஆபீஸ், குடும்ப வேலைகள் முடிந்தபிறகு, முக்கியமாக நேரத்தைச் செலவிடுவது எதில் என்று பார்த்தால், சினிமா, நண்பர்களை வரவேற்றுப் பேசுவது, விசேஷங்களுக்குச் சென்று அதிகபட்ச நேரத்தைச் செலவிடுவது, சாரமில்லாத பத்திரிகைகளைப் படிப்பது, அக்கம் பக்கத்துச் செய்திகளை அத்தியாவசியமாகச் சேர்ப்பது என்பன போன்ற செயல்களில் என்று தெரியும்.

மாறாக, பரீட்சைக்குப் படிக்கும்பொழுது, வீடு மாற்றும் பொழுது, திருமணம் ஏற்பாடு செய்யும்பொழுது, எப்படி அவற்றிற்கு முக்கிய முதலிடம் கொடுத்து, பின்னரே அன்றாட வேலைகளை இரண்டாம்பட்சமாகச் செய்கிறோமோ, அதுபோல், ''வீட்டின் சுத்தம் அன்னை வழிபாடு'' எனக் கொண்டு, அதற்கு முதலிடம் கொடுத்து, வீட்டில் உள்ள அனைவரும் திருமணத்திற்கு வேலை செய்வதைப் போல் வேலை செய்து, சுத்தத்தை முழுத் திருப்தியுடன் பூர்த்தி செய்த பிறகு கவனித்தால், ஆபீஸ் வேலை, குடும்பப் பொறுப்பு, அத்தியாவசியமான கடமைகள் எதுவும் தடைபடவில்லை என்று தெரியும். சுத்தத்தைத் தலையாய காரியமாக மேற்கொண்டு நிலைநிறுத்தியபின் நேரமில்லை என்பது வம்பளப்பதற்கு, ஊர் சுற்றுவதற்கு, சினிமா பார்ப்பதற்குத்தானே அன்றி, அவசியமான கடமைகளுக்கு நேரமில்லாமல் இல்லை என்பது தெரியவரும். இந்த முறையின் ரகஸ்யமே அதுதான்.



வீணான காரியங்களில் மனதைச் செலுத்தாமல் இருக்க முடிவு செய்தால்தான் சுத்தத்தைத் திருப்தியாக நிறைவேற்ற முடியும்.

அப்படிப்பட்ட சுத்தம் அன்னைக்குச் சிறந்த வழிபாடு. அந்த வழிபாடு ஒன்றே வாழ்க்கைச் சிறப்பைத் தேடித் தரும்.

### 13. ஒழுங்கு (Orderliness):

ஒழுங்கு என்பது **(discipline)** கட்டுப்பாட்டைக் குறிக்கும். இங்கு **orderliness** என்ற கருத்தை ஒழுங்கு என்ற சொல்லால் குறிக்கின்றேன். **Discipline, regularity** என்பவற்றுக்கும், ஒழுங்கு என்ற தமிழ்ச் சொல் பொருந்தும். என்றாலும், **Orderliness** என்பதே என் தலைப்பு. அதைக் குறிக்கவே ஒழுங்கு என்ற சொல்லைப் பயன்படுத்துகிறேன்.

பொதுவாக **(discipline)** கட்டுப்பாடு என்றால் என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். அதேபோல் **regularity** என்றாலும் தெரியும். இவை இரண்டையும் நீக்கி **(orderliness)** ஒழுங்கு என்ற கருத்தை மட்டுமே இங்கு நான் கருதுகிறேன். மேலும் தெளிவுபடுத்த வேண்டுமானால் **(clumsiness)** குளறுபடி என்ற கருத்துக்கு எதிரானது ஒழுங்கு என்று நான் குறிப்பிடுவது.

அலமாரியில் உள்ள புத்தகங்கள், மேஜை மீதுள்ள பொருட்கள், ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே இங்குக் கூறப்படும் கருத்து. அலமாரி, மேஜையில் ஆரம்பித்து, வீட்டில் உள்ள எல்லா இடங்களிலும் உள்ள எல்லாப் பொருட்களும் - தலையணை, பாய், பெட்டி, படுக்கை, சமையல் சாமான்கள், மற்ற அறைகளில் உள்ள பொருட்கள் - வேலை நடக்காத நேரத்தில் அழகாகவும், அடுக்காகவும், வரிசையாகவும், ஒழுங்காகவும், நிரந்தரமாகவும் இருக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இதையே ஒழுங்கு என்று நான் குறிப்பிடுகிறேன். ஒழுங்கு இருந்தால், அதற்குரிய சுத்தம் தேவை என்பதைச் சொல்லத் தேவையில்லை.

வீட்டில் உள்ள பொருட்கள் பலவகைப்பட்டவை; சமையல் சாமான்கள், கடப்பாரை, அரிவாள் போன்ற கருவிகள், புத்தகங்கள், படுக்கை சம்பந்தப்பட்டவை, எப்பொழுதோ உபயோகிக்கப்படும் பொருட்கள் எனப் பல தரப்பட்டவை.

அவையெல்லாம் உபயோகமில்லாதபொழுது ஒழுங்காக, சுத்தமாக அடுக்கி வைக்கப் பட்டிருக்க வேண்டும்.

ஓர் எலெக்டிரிக் பில் வேண்டுமானால், **L.I.C.** ரசீது வேண்டுமானால், **B.A.** சர்ட்டிபிகேட் வேண்டுமானால் வீடு முழுவதும் தேடுவது பெரும்பாலோர் பழக்கம். அப்படியின்றி, எவை, எங்கு இருக்கின்றன என்ற தெளிவுடன் வைக்கப்பட்டு இருந்தால், ஒன்று வேண்டும் எனும்பொழுது நேராகச் சென்று எடுத்துக்கொள்ளலாம். அந்த அளவுக்கு ஒழுங்குமுறை தேவை. இம்முறையின் சிறப்பு மனதில் இருக்கிறது. மனம் முறையாக இருந்தால்தான், பொருட்களை முறையாக வைக்க முடியும் (பொருட்களை ஒழுங்குபடுத்தி வைக்க வேண்டும் என்பதன் மூலம், மனத்தை முறைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே பொருள்). முறைப்படுத்தப்பட்ட மனத்தில் அன்னையின் சக்தி தீவிரமாகச் செயல்படும்.

இதைச் செய்வதில் என்ன கஷ்டம்? ஒருவர் இதைக் கையாள ஆரம்பித்தால் 2, 3 நாட்களுக்குப்பின் அதை விட்டுவிடுவார். அப்படியே அவர் தொடர்ந்து செய்தாலும், இவர் அடுக்கி வைப்பதையெல்லாம் மற்றவர் கலைத்துக்கொண்டே வருவார். அவருக்குப் பைத்தியம் பிடித்துவிடும்.

வெற்றிகரமாக, தொடர்ந்து, சிறப்பாக ஒழுங்கைக் கடைப்பிடிக்க வேண்டுமானால், அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். முதலில் வீடு முழுவதையும் ஒழுங்குபடுத்திய-பின் அவரவர்கள் தங்கள் தங்கள் பகுதியில் ஒழுங்கைக் கலைக்காமல் தொடர்ந்து கடைப்பிடிக்க ஒத்துக்கொள்ள வேண்டும். அந்த ஒத்துழைப்பில்லாமல் இதைச் செய்ய முடியாது.

சுத்தம் (**Supramental Force**) அன்னையின் சக்தி வந்து தங்க அவசியம் என்பதைப்போல், ஒழுங்கு, குறிப்பாக மனத்தில் ஒழுங்கு, அன்னையின் சக்தி நம்முள் வந்து செயல்படவும், தங்கவும் அவசியம். சிறப்பாக இதைச் செய்து முடிக்க வேண்டுமானால்,

1. நாம் முதலில் நம் மனத்தில் தீர்க்கமான முடிவை எடுத்து, ஒழுங்கைப் பூரணமாக ஏற்படுத்தி, தொடர்ந்து நிலைநிறுத்த வேண்டிய அவசியத்தை உணர வேண்டும்.
2. வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் நம்மைப் போன்ற தீவிர முடிவுக்கு வரவில்லை என்றாலும், செய்து வைத்த ஏற்பாடுகளைக் கலைக்கக்கூடாது. தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற அளவிலாவது தீவிரம் கொள்ள வேண்டும்.
3. ஒழுங்கைப் பூரணமாக நிலைநாட்டத் தேவையான மற்ற பழக்கங்களை விரும்பி ஏற்றுக்கொள்ள வேண்டும்.
4. மாதம் ஒரு முறை அல்லது இரு முறை முதலில் ஏற்படுத்திய அளவுக்கு ஒழுங்கை மீண்டும் திருத்தி அமைக்க வேண்டும் (**Every month the original level of orderliness must be restored**).
5. ஒவ்வொரு மாதமும் அல்லது வாரமும் ஒழுங்கின் தரத்தைச் சிறிதளவு உயர்த்த வேண்டும்.

***14. தணிவான பேச்சு:***

பொதுவாக நாம் உயர்ந்த குரலில் பேசுகிறோம் என்பது நமக்கே தெரிவதில்லை. மேலைநாட்டார் குழுமியுள்ள இடத்தில் நாம் பேசும்பொழுது அவர்கள் குரல் அளவுக்கும், நம் குரல் அளவுக்கும் உள்ள மாறுபாடு தெரியும்.

பேச்சு என்பது சக்தி (**energy**). சக்தி என்பது செல்வம். பேச்சைக் குறைத்தால் சக்தி சேரும். சக்தி சேர்ந்தால், பணம் சேரும். அதிக அளவு செல்வத்தைப் பெற பேச்சைப் பெரிதும் குறைத்தல் நலம்.

முதலில் நாம் உயர்ந்த குரலில் பேசுகிறோம் என்று உணர வேண்டும். எதிரில் உள்ளவர்கட்குக் கேட்கும் அளவிலேயே குரலைத் தாழ்த்திப் பேச முயன்று, வெற்றி காணவேண்டும். அதன் பின்னர் பேச்சின் அளவு (**i.e number of words**) குறைக்கப்பட வேண்டும். ஒரு 10 நிமிஷம் நாம் பேசியபின் - சுமார் 800, 1000 வார்த்தைகள் 10 நிமிஷத்தில் பேசப்படும் - மீண்டும் நாம் சொல்லியவற்றை நினைவுகூர்ந்து அதற்கு ஒரு (**precise**) சுருக்கம் எழுத வேண்டும். அப்படிப் பார்த்தால் அதே

கருத்துகளைச்சுமார் 40, 50 வார்த்தைகளில் சொல்லியிருக்கலாம் என்று தெரியும். குரலின் அளவைத் தாழ்த்தியும், வார்த்தைகளின் ஓட்டத்தைச் சுருக்கியும் பேச வேண்டும்.

குரலைத் தாழ்த்துவதால் நாம் நம் பிராணனை (vital) நம் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வருகிறோம். வாழ்க்கையை நடத்துவதே பிராணன் என்பதால், பிராணன் கட்டுப்பட்டால் வாழ்க்கை கட்டுப்படும். கட்டுப்பட்ட வாழ்க்கையின் மூலம் அன்னை செயல்படுவது எளிது. வாழ்க்கை நமக்குக் கட்டுப்பட்டு விட்டதால், அன்னையால் நம் வாழ்க்கையை எளிதில் வளப்படுத்த முடியும்.

தாழ்ந்த குரலும், குறைந்த சொற்களும், உயர்ந்த வாழ்க்கை நிறைந்து விளங்க உதவும்.

***15. சண்டைகளைத் தவிர்த்தல்:***

வாய்ச்சண்டை (quarrel), வாக்குவாதம் (discussion), ஒருவரோடு ஒருவர் பேசாமலிருத்தல் (disharmony), பிணக்கு (conflict), விதண்டாவாதம் (contention) ஆகியவை நம் வாழ்வில் பங்குபெறுகின்றன. ''நாலு பேர் சேர்ந்தால் சண்டை வராமல் இருக்காது'', ''எவ்வளவு பெரிய இடமானால் என்ன, அங்கே போய்ப் பார்த்தால் தெரியும். எங்கேயும் இதெல்லாம் இருக்கும்'', ''சென்ட்ரல் காபினெட்டிலிருந்து, உள்ளூர் காலேஜ்வரை சண்டையில்லாத இடமே இல்லை'', ''பெரிய மதாச்சாரியார்களெல்லாம் தவிர்க்க முடியாததை, நம் வீட்டில் இருக்கக்கூடாது என்றால் எப்படி அது நடக்கும்?'' என்றெல்லாம் சொல்லி, நாம் சண்டையிடுவது சகஜம் என்று கொள்கிறோம்.

நாம் பழகும் இடத்தில் எந்தச் சண்டையும் என்னால் வரக் கூடாது என்ற முடிவை ஓர் அன்பர் கொண்டால், சண்டைகளைத் தவிர்ப்பதே என் கொள்கை என்றொருவர் ஆரம்பித்து அதில் வெற்றி பெற்றால், அன்னையிடம் அவர் பரிசு பெறலாம். இப்படி ஒருவர் சொன்னால் அதற்கென்ன அர்த்தம்? அவர் மனதில் வெறுப்பு, கசப்பு, பிணக்கு, பொறாமை இல்லை என்று பொருள். அந்த வெற்றியை அவர் பெற்றபின் அவர் நெஞ்சம், அன்னையின் பொக்கிஷம்.



சண்டைகளைத் தவிர்க்க நாம் என்ன செய்யலாம்?

1. சண்டை அன்னைக்குப் பிடிக்காது என்பதால், அதை அறவே நீக்க வேண்டுமென முடிவு செய்தல்.
2. நம்முடன் ஒருவர் சண்டைக்கு வந்தால், ''இதற்கு நான் எப்படித் துணையாவேன், அந்தக் காரணத்தைக் கண்டுபிடித்து விலக்குவேன்'' என்ற கொள்கையை மேற்கொள்ள வேண்டும்.
3. பிறர் சொல்வதில் உள்ள உண்மையை அலசிப் பார்த்து எடுத்துக்கொள்ள வேண்டும்.
4. நம் கருத்தில் உள்ள தவற்றை ஆராய்ந்து விலக்க வேண்டும்.
5. நம் பழக்கத்தில் சண்டையை வளர்ப்பதற்குத் துணையானவற்றைக் கண்டு விலக்க வேண்டும்.

***16. குறை கூற மறுத்தல்:***

அன்னை (psychic education) சைத்தியப்புருஷனை முன் கொண்டுவரும் கல்வி என்ற பகுதியில் 10 சட்டங்களைச் சொல்கிறார். இது அவற்றில் ஒன்று.

மேல்நாட்டு மனநூல் (psychology) துறையில் ஒரு வாசகம் உண்டு. ''உனக்கு ஒருவரைப் பற்றித் தெரிய வேண்டுமானால், அவரைத் தூண்டி பிறரைக் குறைகூறச் சொல். பிறர் மீது அவர் கூறும் எல்லாக் குறைகளும் அவரிடம் இருக்கும்''. நம்மிடம் உள்ள குறைகள் நம் கண்ணுக்குத் தெரியாது. ஆனால் உண்மையிலேயே, நம் குறைகளை - நமக்குத் தெரியாதவற்றை - நாம் விரும்புவது இல்லை; வெறுப்பதும் உண்டு. பிறரிடம் நம் குறைகளைக் கண்டவுடன் நம் வெறுப்பு வெளிப்படுகிறது. பிறர் மீது நாம் குறை கூறுவதன் மூலம் நாம் நம்மிடம் உள்ள குறைகளை வெளிப்படுத்துகிறோம். நாம் அவர் மீது குறை சொல்லிவிட்டால் மனம் திருப்தியாகிவிடுகிறது. குறை சொல்லாவிட்டால் அந்தச் சக்தி (energy) நம்மைத் திருத்திக்கொள்ள உதவும். குறையைச் சொல்லிவிட்டால் நம்மைத் திருத்திக்கொள்ளும் வாய்ப்பை இழந்துவிடுகிறோம்.

''பிறரைத் திருத்த முடியவில்லை என்றால், அவர் மீது குறை கூறாதே'' என்கிறார் அன்னை.

பிறரிடம் ஒரு குறையைக் கண்டபின், அதைப் பேச மனம் துடிக்கும். அந்தத் துடிப்பு நமக்குக் கட்டுப்படாது. அவருடைய குறைக்குக் காரணம் புரிந்துவிட்டால், குறை சொல்லத் தோன்றாது. ஆகவே குறையைச் சொல்வதற்குப் பதிலாக, அதன் காரணத்தை அறிய முற்பட வேண்டும். அந்தக் குறையுள்ள மனிதனுடன் நாம் பழகவேண்டியது எதனால்? நம்மிடம் உள்ள ஒரு குறையே குறை உள்ள ஒரு மனிதனை நம்மிடம் கொண்டு வந்துள்ளது என்று உணர வேண்டும். நம் குறையை அகற்றினால், அவர் மாறுவார் அல்லது நம்மை விட்டகலுவார்.

ஓர் இளைஞன் தன்னைவிட 10 வயது பெரியவர் ஒருவருடன் பழகினான். பெரியவருடைய முழு சுயநலம் இளைஞனைப் பாதித்தது. ஏன் சுயநலமி என்னிடம் வரவேண்டும்? என யோசனை செய்தான். சுயநலம் நிரம்பியவருடனும், அவர் மனம் கோணாமல் தன்னால் பழக முடியும் என்று தான் பெருமைப்படுவதை உணர்ந்தான். அடுத்த நாளிலிருந்து அந்தச் சுயநலமிக்கு வேறு வேலை வர இவர்களுடைய சந்திப்பு 1%ஆகக் குறைந்துவிட்டது.

யார் மீதுள்ள குறையையும் வெளியில் சொல்ல முழுவதுமாக மறுத்தால், நம் மனத்திலுள்ள குறைகளை அகற்ற முடியும். இது அன்னை விரும்பும் மனப்பாங்கு. இதை ஏற்று பூரணமாகப் பயின்றால், அன்னை நம்மிடம் பூரணமாக வந்து தங்குவார்கள்.

### *17. ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் அன்னை கூறியதைத் தெரிந்துகொள்ளுதல்:*

அன்னையைப் பற்றிய முக்கிய விஷயங்கள் பல. அவை எல்லாம் **(public secret)** எல்லோருக்கும் தெரிந்த இரகஸ்யங்கள் எனலாம். உதாரணமாக, பொய் சொல்லக்கூடாது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்ததே. ஆனால் வேறொரு வகையாகப் பார்த்தால், அதுவே பெரிய யோக ரகஸ்யமாகும். அதனால் சாதிக்க முடியாத யோக சித்திகள் கிடையாது.



அழைப்பு, சமர்ப்பணம் என்பவை அதுபோல் அன்னைக்கு முக்கியமானவை. இதைத் தெரியாதவர்கள் இல்லை. எவரும் பின்பற்றுவதில்லை. அன்னை கூறியதைத் தெரிந்துகொள்ளுதல் எனும்போது அன்னை எழுதியுள்ளவற்றைப் படிப்பது எனப் புரிந்துகொண்டால் விஷயம் தடம் மாறிப்போகும். எதிர்பார்த்த பலன் இருக்காது. சாதாரணமாக ஒரு விஷயத்தைப் படித்துத் தெரிந்துகொள்வதற்கும் **(to know it as information)**, அதன் உட்கருத்தை உணர்ந்து புரிந்து கொள்வதற்கும் **(to receive it as knowledge)** உள்ள வித்தியாசத்தை ஓர் உதாரணத்தின் மூலம் கூறுகிறேன்.

அன்னை தம் சாதகர்கள் மௌனமாயிருப்பதை விரும்பவில்லை. அதிகமாகப் பேசுவது தவறு என்கிறார். நம் மரபுக்கு மாறாகப் பேச்சை அவசியமான அளவுக்குப் பேச வேண்டும் **(controlled speech)** என்று சொல்கிறார். இதன் உட்கருத்து விளங்காவிட்டாலும், இந்த முறையைக் கையாள்பவர்களுக்கு அது பலன் தரும். (இங்கு நாம் கருதுவது என்னவென்றால் முறையைக் கையாளாமல், அம்முறையின் சூட்சுமக் கருத்தைப் புரிந்துகொள்வதால் அம்முறையைக் கையாண்ட பலன் எப்படி கிடைக்கும் என்பதே. இந்தத் தலைப்பு அதற்காக ஏற்பட்டதே. ஒரு முறையைக் கையாண்டால் அதற்குப் பலன் உண்டு. எல்லாக் கருத்துகளின் சூட்சுமத்தை உணர்ந்தால், ஒரு முறையைக் கையாளும் பலன் உண்டு). அளவோடு பேச வேண்டும் என்பதை எவரும் எளிமையில் புரிந்துகொள்ளலாம். மௌனம் தேவையில்லை. அதிகமாகப் பேசக்கூடாது. தேவையான அளவுக்குப் பேசவேண்டும் என்பதைப் புரிந்துகொள்வதில் சிரமம் இல்லை. அப்படிப் புரிந்துகொண்டால் அதன் உட்கருத்துப் புரியாது. சூட்சுமம் புரியாது. இதன் உட்கருத்து ஒரு யோகப் பயிற்சி. பேசுவது இயல்பு. அதைக் கட்டுப்படுத்துவது கடினம். அதை விலக்கி, 10, 20 ஆண்டுகள் ஒருவர் பேசாமலிருப்பது சிறப்பு. அவரை மௌனி, சாது என்கிறோம். இவர் வாயால் பேசுவதில்லை. மனத்தில் பேச்சு ஓடிக்கொண்டிருக்கும். மனத்திலும் மௌனம் நிலைத்தால் இவர் முனிவராகிறார். அது பெரிய நிலை.

மௌனம் என நாம் சாமியார்களிடையே அறிந்தது வாயால் பேசுவதில்லை என்பதே. அதுவும் மிகக்கடினம்.

அன்னை, மனத்தில் உள்ள மௌனம் நிலைத்த பிறகும் வாயால் பேசாமல் இருப்பது அவசியமில்லை என்கிறார். கரு உள்ள இடம் இதுதான்.

சிறப்பான மனிதன் யோகத்திற்கு வருகிறான். அவனைப் பேசு என்றால் பேசுவான். பேசாதே என்றால் பேசாமலிருப்பான். சாதாரண மனிதனால் முடியாததை அவன் செய்வான். ஆனால் அன்னை, ''தேவைப்பட்ட அளவுக்குப் பேசு'' என்கிறார். கூர்ந்து கவனித்தால் வாயால் பேசாதவன் மனத்தில் பேசிக்கொண்டிருக்கிறான். மனத்திலும் மௌனம் பூண்டவனுக்கும் பேசவேண்டுமென்ற ஆசை இருக்கிறது. அது அழியவில்லை. தன் மன வலிமையால் அந்த ஆசையை அடக்கிவைத்திருக்கிறான். அவன் சில வார்த்தை பேச ஆரம்பித்தால் தன் கட்டுப்பாட்டை இழந்து தொடர்ந்து பேசுகிறான். ஏனெனில் பேசவேண்டும் என்ற ஆசை அழியவில்லை. அந்த ஆசையையும் ஒழித்தவன் சில வார்த்தைகள் பேசினால், அதன் மூலம் கட்டுப்பாட்டை இழக்கமாட்டான். எனவே அன்னை அளவோடு பேசு என்று சொல்வதன் உட்கரு பேசவேண்டும் என்ற ஆசையை அழித்திடு என்று பொருள். ஆசையானது பேச்சைப் பொறுத்த அளவில் அழிக்கப்பட வேண்டும் என்பதே இதில் உள்ள சூட்சுமம். இதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றே நான் சொல்கிறேன்.

நமது அன்றாட வாழ்வில் பெற்றோருடன் பழகுவது, குழந்தைகளைக் கண்டிப்பது, கடன் கொடுப்பது, கடன் வாங்குவது, படிப்பது, பொழுதுபோக்குக்காக ஒன்றைச் செய்வது, என்றெல்லாம் சுமார் 400, 500 விஷயங்கள் உள்ளன. முதலில் சொல்லியதுபோல் - எல்லோருக்கும் தெரிந்த இரகஸ்யம் - அன்னை ஒரே ஒரு விஷயத்தில்கூட நம் மரபை ஏற்றுக்கொள்வதில்லை. மரபில் உள்ள ஒவ்வொரு விஷயத்திலும் அன்னை மாறுபட்ட கருத்தை, பழக்கத்தை அளிக்கின்றார். நாம் நம் வாழ்வில் உள்ள அனைத்து விஷயங்கள் பற்றியும் அன்னை என்ன சொல்லியிருக்கிறார்? அதன்



சூட்சுமம் என்ன? மரபிலிருந்து எப்படி அது மாறுபட்டது? என்பதைத் தெரிந்துகொண்டால் - ஒரு விஷயத்தில் இல்லை, எல்லா விஷயத்திலும் தெரிந்துகொள்ள வேண்டும் - அந்த ஞானத்திற்கு ஒரு முறையை முழுவதும் கையாளும் பலன் உண்டு.

ஆன்மீக ஞானத்திற்கும் (spiritual knowledge) அன்னையின் ஞானத்திற்கும் (Mother's knowledge) உள்ள வித்தியாசம் முக்கியமானது. ஆன்மீக ஞானத்தின் திறனை ஆன்மா மட்டுமே பெற முடியும். அன்னையின் ஞானத்தின் திறனை வாழ்க்கையும் பெற முடியும். ஒரு தபஸ்வி ஆன்ம ஞானம் பெற்றால், அதனால் அவர் மோட்சமடையலாம். அவருடைய வாழ்வைப் பொலிவுபடுத்தும் திறன் அவருடைய ஆன்மீக ஞானத்திற்குக் கிடையாது. அவருக்கு வாழ்க்கையும் இல்லை. வாழ்க்கைத் தேவையும் இல்லை. அதனால் அவருக்குப் பிரச்சனை இல்லை. வாழ்க்கையில் ஞானி ஒரு காரியத்தைச் சாதிக்க வேண்டுமானால், வாழ்க்கையில் உள்ள பெரியவர்கள் எவரும் அவருக்குக் கட்டுப்படுவார்கள். அவர்கள் மூலமே அதை அவர் நிறைவேற்ற வேண்டும். அன்னையின் ஞானத்திற்குத் தன்னிறைவு (self fulfilment) உண்டு. ஞானம் இருப்பதால், தானே அது வாழ்க்கையில் பூர்த்தி பெறும். இது அன்னையின் சிறப்பு. அதனால் அன்னையின் முறைகளின் சூட்சும ஞானத்தை அறிவதால் அன்பர்களுக்கு வாழ்க்கையில் பூரணம் உண்டு.

### 18. பிறர் கண்ணோட்டத்தில் பிரச்சனைகளைப் புரிந்துகொள்ள வேண்டும்:

அக்பர் அரண்மனையில் உள்ள வீடு பெருக்குபவன் (sweeper) ஒருவனுடைய இராசி பயங்கரமானதென அறிந்து, அவனைக் காலையில் பார்க்க எல்லோரும் பயப்படுவார்கள். ஒரு நாள் அக்பர் அவன் முகத்தில் விழித்தார். அன்று அரண்மனையில் தகராறு. வெளிநாட்டுப் படையெடுப்பைப் பற்றிய ஒற்றர் தகவல். அக்பர் அவனுக்குத் தூக்குத்தண்டனை விதித்தார். அவருடைய மந்திரி, ''தண்டனைப் பெரிது. பெருக்குபவனது (sweeper) மனதில் என்ன இருக்கிறது என்று

நாம் தெரிந்துகொள்வதும் அவசியம்'' என்றார். அக்பர் அவனைக் கூப்பிட்டனுப்பினார். மந்திரி, ''இன்று காலையில் நீ யார் முகத்தில் விழித்தாய்?'' என்று கேட்டார். அவன் சக்கரவர்த்தி முகத்தில் விழித்ததாகச் சொன்னான். மந்திரி மேலும் அவனை என்ன நேர்ந்தது என்றார். தன்னைத் தூக்கு மேடைக்கு அனுப்பினார்கள் என்றான். அரசன் மன்னித்தான்.

பெருக்குபவன் முகத்தில் விழித்ததால், தனக்குப் பல இடையூறுகள் ஏற்பட்டன என அரசன் நினைத்தால், அரசன் முகத்தில் விழித்த அவனுக்கு உயிர் போகும் ஆபத்து வந்தது என்று அவன் கருதுகிறான். அது உண்மையும்கூட. எந்தப் பிரச்சனையையும் எதிராளியின் நோக்கில் புரிந்துகொள்ள முயன்றால் உண்மை விளங்கும்.

ஒரு பிரச்சனை நம்மை எப்படிப் பாதிக்கிறது என்றுதான் நாம் நினைப்பது வழக்கம். பிறர் கண்ணோட்டம் என்ன என்று நினைப்பவர் குறைவு. அப்படி நினைப்பதே ஒரு நல்லெண்ணம்; விசால புத்தி. அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு விஷயத்திலும் அப்படி நினைக்க நாம் நமக்குப் பயிற்சி அளித்துக்கொண்டால், மனமும் ஆத்மாவும் பக்குவம் அடையும். பக்குவமான ஆத்மா மூலம் அன்னை சிறப்பாகச் செயல்பட முடியும்.

### *19. நம் வீட்டில் அன்னையைப் பிரதிஷ்டை செய்தல்:*

ஒரு பிரபலமான ஹனுமார் கோயில். அங்குக் கொண்டாடும் லக்ஷ தீப திருவிழாவுக்கு ஜில்லாவின் எல்லாப் பகுதி- களிலிருந்தும் மக்கள் வருவதுண்டு. அக்கோயிலின் பிரபலத்திற்கு முக்கியக் காரணம் அங்குள்ள குருக்கள்தான் என்பார்கள். குருக்களுக்கு ஹனுமாரிடம் ஈடுபாடு அதிகம். அவருடைய ஆர்வத்தாலேயே கோயில் பிரபலம் அடைந்தது. அவருடைய முகம் ஹனுமார் போலவே இருக்கும். குருக்கள் ஹனுமாரைத் தம் ஆன்மாவிலும், உடலிலும் பிரதிஷ்டை செய்துள்ளார். ஹனுமார் மீதுள்ள பக்தியால் **(identification)** அவருடன் ஒன்றிப்போய்விட்டார். தம் முகம்கூட தாம் வணங்கும் தெய்வத் திருவுருவம் தாங்கும் அளவுக்கு



ஹனுமாருடன் குருக்கள் உள்ளும், புறமும் இரண்டறக் கலந்துவிட்டார்.

நம் வீட்டில் அன்னையைப் பிரதிஷ்டை செய்யும்முன், நாம் அன்னையை மனதில் பிரதிஷ்டை செய்ய வேண்டும். கண்களை மூடி உள்ளே மூடிய கண்களின் பார்வையைச் செலுத்தினால், அன்னை மனத்தில் கோயில் கொண்டுள்ளது தெரிய வேண்டும். அந்நிலைக்கு வந்த பின்னரே வீட்டில் அன்னையின் சாந்நித்தியத்தை நிலைபெறச் செய்ய முடியும்.

சுருக்கமாகச் சொன்னால், வீட்டில் உள்ளவர் அனைவரும், அன்னைக்குப் புறம்பான செயல்களை விலக்கி, அன்னைக்கு முக்கியமான செயல்களை விரும்பிச் செய்தால், அன்னையை வீட்டில் பிரதிஷ்டை செய்வது எளிது. அப்படியில்லை என்றால் அதிகமான பிரயத்தனத்தால்தான் அதைச் சாதிக்க முடியும்.

நம் மனத்திலும், உடலிலும் அன்னையைப் பிரதிஷ்டை செய்தல் முதற்படி. இடையறாது மனத்தால் நினைத்தால் அன்னை அங்கு நிரந்தரமாகக் குடியேறுவார். உடலைத் தூய்மையாக வைத்துக் கொண்டு, உடலால் மனதறிந்த தவறு எதுவும் செய்யாவிட்டால், உடல் அன்னை குடியேறுவதற்குத் தகுதி உள்ளதாகிவிடும். நம் உடல் அல்லது உடலுக்குரிய சூட்சுமச் சக்கரத்தில், அதாவது மூலாதாரத்தில் அன்னையைப் பிரதிஷ்டை செய்ய முயன்று, வெற்றி பெறுதல் அடுத்த கட்டம். எளிதானது இல்லாவிட்டாலும், அது பலித்துவிடும். பின்னர் நம் வீட்டின் ஒவ்வொரு பகுதியிலும் சிறிது நேரம் தினமும் நின்று தியானம் செய்தால், நாளடைவில் வீட்டில் அன்னையிருப்பது தெரியும். 19 வயது பையன் ஓர் அன்பர் வீட்டிற்கு வந்தான். சற்றுத் தொலைவில் அவனுக்கு அவர் வீட்டிற்கு மேலே பெரிய ஒளி தெரிந்தது. யாரிடமும் சொல்லக் கூச்சப்பட்டான். அவர் வீடு மாறினார். புது வீட்டில் அவனுக்கு ஒளி சிறிதே தெரிந்தது. 3 மாதங்களுக்குப் பின்னர் புது வீட்டில் பழைய அளவுக்கு அவனால் ஒளியைப் பார்க்க முடிந்தது. பின்னர் அவன் அவரைச் சந்தித்து தான் கண்டதைச் சொல்லி விளக்கம் கேட்டான்.

பக்தருடைய இடைவிடாத தியானம் அன்னையின் ஒளி அவர் வீட்டில் வானளாவ உயரும்வரை கொண்டு வந்துள்ளது.

### *20. அன்னையை நம் வீட்டில் உள்ளவர் அனைவர் மனத்திலும் பிரதிஷ்டை செய்வது:*

தம் மனதில் அன்னையைப் பிரதிஷ்டை செய்தவராலேயே இதைச் செய்ய முடியும். இடைவிடாது அன்னையைப் பக்தியுடன் நினைவுகூர்பவருக்கு மனதில் அன்னை வந்து நிரந்தரமாகத் தங்குவார். நம் மனதில் அன்னை தங்கிவிட்டார் என்பதற்கு ஏதாவது அறிகுறி உண்டா? என்றால் முக்கிய-மானவற்றை மட்டும் சொல்கிறேன். ஏராளமான அறிகுறிகள் உண்டு.

1. மனம் அலாதியான சந்தோஷத்தால் நிரம்பி வழிந்து, லேசாகி, வாழ்க்கையில் பிரச்சனையே இல்லை என்று கருதும்.
2. தூக்கம் தியானம் போன்றிருக்கும். தூங்கி எழுந்தால் தியானம் கலைந்தது போன்றிருக்கும்.
3. பயம், சந்தேகம், கவலை போன்றவை எக்காரணத்தை முன்னிட்டும் எள்ளளவும் இருக்காது.
4. கண்களை மூடினால் அன்னை நெஞ்சில் இருப்பது தெரியும். உருவம் தெரியாவிட்டாலும், அன்னை இருப்பதைத் தெளிவாக உணர முடியும்.

தன் மனதில் அன்னையைப் பிரதிஷ்டை செய்ததைப் போலவே அன்னையை உணர்விலும், உடலிலும், வீட்டிலும் முழுமையாகப் பிரதிஷ்டை செய்ய வேண்டும். இதுவே முதற்படி. சுருக்கமாகச் சொன்னால் எந்த உணர்ச்சி வரும் முன்னரும் அன்னை நினைவு வந்தால் அன்னையை உணர்வில் பிரதிஷ்டை செய்தாயிற்று எனலாம். எந்தச் செயலையும் ஆரம்பிக்கும் முன்னே அன்னை நினைவு தானே வந்தால் உடலில் அன்னை உறைகின்றார் என்று பொருள். நம் வீட்டிற்கு வருபவர்கள் இது அன்னை குடியிருக்குமிடம் என்று



உணர்ந்தால், நம்மிடம் சொன்னால் அன்னை நம் வீட்டிற்கு வந்துவிட்டார் என்று அர்த்தம்.

இதுவரை செய்வதே பக்தனைப் பொறுத்தவரை பெரிய காரியம். அடுத்த கட்டமே அன்னையை நம் வீட்டார் மனதில் பிரதிஷ்டை செய்வது. அதையும் பூர்த்தி செய்வது யோகத்தில் வெற்றி கண்டதற்கு நிகராகும்.

நம் வீட்டில் உள்ள அனைவரும் நம்மிடம் நல்லெண்ணம், அன்பு, நம்பிக்கையுடையவராயிருந்தால்தான் இதைச் செய்ய முடியும். நமக்கு முரணானவர், நம்மைப் பிடிக்காதவர், நம் மீது நம்பிக்கையில்லாதவர், நம் மீது கசப்புள்ளவர்கள் மனதில் நம்மால் அன்னையைப் பிரதிஷ்டை செய்ய முடியாது. முயன்றால் பலன் எதிர்மாறாக இருக்கும். இதைச் செய்யும் பொழுது பிறரைக் கலந்து ஆலோசிக்காமலே செய்ய வேண்டும். எப்படி ஒருவருடைய மனதைத் தெரிந்துகொள்வது என்ற கேள்வி 10-இல் 9 பேரிடம் எழாது. ஏதோ ஒருவர் விஷயத்தில் நாம் தெளிவில்லாமல் இருப்போம். நாம் அன்னையை இவர் மனதில் இருத்தினால் இவர் ஏற்றுக்கொள்வாரா, இல்லையா என்ற கேள்வி எழுந்தால், சுலபமாகச் சோதனை செய்யலாம்.

நாம் மனதை ஒரு நிலைப்படுத்தும்பொழுது **(concentrate)** தலையிலாவது, நெஞ்சிலாவது ஒரு நிலைப்படுத்துகிறோம். அதே போல் தியான அறையில் இருந்து ஆபீஸில் நம் அறையில் நாம் நம் மனதை ஒரு நிலைப்படுத்தலாம் **(we can concentrate on our office while sitting in our meditation room)**. அதே போல் மற்றவர் மனதில் நம் எண்ணங்களை ஒரு நிலைப்படுத்தினால், அன்னையை அவர் மனதில் நாம் நினைத்தால், மாடியிலிருந்த அவர் எழுந்து உங்களை நோக்கி வந்தால், அல்லது அவர் முகம் மலர்ந்தால், அல்லது உங்கள் கருத்தை அவர் வெளியிட்டால், (நீங்கள் நினைத்தபடி அவர் செய்தால்), அல்லது பொதுவாக அவர் நல்ல காரியம் செய்தால், நீங்கள் அவர் மனதில் அன்னையை இருக்கச் செய்ததை அவர் ஏற்றுக்கொள்கிறார் என்று பொருள். மாறாக அன்னையை அவர் மனதில் நீங்கள் நினைத்தவுடன் அவருக்கு எரிச்சல் வந்தால், உங்களிடம் சண்டைக்கு வந்தால், உங்களைத் திட்டிப் பேசினால்,

கொட்டாவி வந்தால், அவர் எழுந்து நடக்கும் பொழுது மேஜை மீது இடித்துக்கொண்டால், அன்னையை அவர் ஏற்றுக்-கொள்ளவில்லை எனப் பொருள்.

பிள்ளைகளானாலும், கணவனானாலும், மனைவியானாலும், பெற்றோரானாலும், அன்னையை அவர்களுக்கு வலியுறுத்தி, அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக, கொடுக்க முயலக் கூடாது. அது தவறு; பிடிவாதமாக அதை ஒருவர் செய்தால் மற்றவரால் அவருக்குத் தீங்கிழைக்க முடியும்.

நம்மவர் அனைவரும் நம்மிடம் நல்லெண்ணம் உள்ளவர் எனக் கொள்வோம். நம் மனதில் **concentrate** செய்வதற்குப் பதிலாக அவர் மனதில் வர ஆரம்பிப்பார். நம்முள் எப்படி அன்னையைப் பிரதிஷ்டை செய்தோமோ, அப்படியே மற்றவர் மனத்திலும் பிரதிஷ்டை செய்யலாம். ''நான் உங்கள் நெஞ்சில் எல்லாம் குடி இருக்கிறேன்'' என அன்னை ஆசிரமவாசி ஒருவரிடம் சொல்லியது இதைத்தான். நம்முள்ளும், நம்மவர் மனதிலும், நம் வீட்டிலும் அன்னையைப் பிரதிஷ்டை செய்தவருடைய வாழ்க்கை புனிதம் நிறைந்ததாகவும், புதுமை உள்ளதாகவும் இருக்கும்.

**21. பகவான் ஸ்ரீ அரவிந்தருடைய நூல்களைப் பயிலுதல்:**

**22. அன்னையின் நூல்களைப் படித்து ஆன்மீகப் பலன் பெறுதல்:**

பகவான் எழுதியவை, அன்னை எழுதியவை ஆகியவற்றிற்கு மந்திர சக்தியுண்டு. தினமும் இந்த நூல்களில் சில பக்கங்களைப் படிப்பது தியானத்திற்கு ஒப்பாகும். படித்து முடித்தவுடன் தியானம் வருவது தெரியும். பாரிச வாயுவினால் பாதிக்கப்-பட்டவர் **Life Divine** படிக்கச் சொல்லிக் கேட்டு அதனாலேயே குணம் அடைந்தார்.

இரவு படுக்கப் போகும் முன் **Synthesis of Yoga** எனும் நூலில் ஓரிரு பக்கங்கள் படிப்பது நல்லது என்று அன்னை சொல்கிறார். அன்னையின் நூல்களைப் பயிலும் முறையை, பொதுவாக, படிப்பில் ஆர்வம் உள்ளவர்கள் ஏற்றுக்கொள்ளுதல் நலம். ஸ்ரீ அரவிந்தருடைய நூல்களைப் பயில விரும்புபவர்கள்



தீவிரமாக ஒரு காரியத்தைச் செய்பவர்களாக (**serious people**) இருத்தல் நலம். அன்னையின் நூல்கள் எளிமையானவை. நுணுக்கமான கருத்துகளை அன்னை அவற்றில் தெரிவிக்கிறார். இந்நூல்களைப் பயில்பவர்கள் அன்னையின் விளக்கங்களின் நுணுக்கத்தை அறிந்து படித்தல் முழுப் பலனைத் தரும். அவை எளிமையாக எழுதப்பட்டுள்ளன.

ஸ்ரீ அரவிந்தருடைய நூல்கள் எளிமையானவை அல்ல. ஆழ்ந்த கருத்துகளைத் தாங்கி வருபவை. சரியான மனப்-பக்குவத்துடன் அவற்றைப் பயின்றால் பகவானுடைய (**consciousness**) யோகப் பக்குவம் படிப்பவரை வந்தடையும் என்கிறார்.

(**Serious minded people**) நெறியான வாழ்க்கையை உடையவர்-களுக்குப் பகவானுடைய நூல்களும், மற்றவர்களுக்கு அன்னையின் நூல்களும் பொருந்தும். இவற்றைப் பயிலுவது ஒரு யோகப் பயிற்சியாகும். தியானத்திற்கு ஒப்பாகும்.

**23. மந்திர ஜெபம்:**

மந்திரங்கள் சக்தி வாய்ந்தவை. தொடர்ந்து அவற்றை ஜெபிப்பதால் அந்தச் சக்தி நம்முள் செயல்படும். ஸ்ரீ அரவிந்தர் எழுதிய ஸ்ரீ அரவிந்தரின் காயத்ரி மந்திரம் அன்னையைப் பற்றி எழுதிய மந்திரம் சிறப்பானவை. அன்னை விரும்பி ஜெபித்த மந்திரம் ''ஓம் நமோ பகவதே''. அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் திருநாமங்களே இந்த யோகத்தில் எல்லா மந்திரங்களைவிட உயர்ந்தவை என ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.

மந்திர ஜெபத்தால் தியானம் பலிக்கும். நம் பிரார்த்தனை-களுக்கும் வலிமை கூடும். மந்திர ஜெபத்தை விரும்பி ஏற்றுக்-கொள்பவர்களுக்கு இது ஏற்ற முறையாகும்.

**24. புற நிகழ்ச்சிகளை நம் உள்ளுணர்வைப் பிரதிபலிப்பதாகக் கருதுவது:**

அடிப்படையில் மண்ணும், மனிதனும் ஒன்றே. நம் சூழ்-நிலையின் ஒரு பகுதியே நாம் என்ற கருத்தை அஸ்திவாரமாகக்

கொண்ட கருத்து. மரத்தின் வேர், அடிமரம், கிளை, பட்டை, காய்ந்த சருகு, தளிர் இலை, பூ, மொக்கு, காய், பழம், எதையும் மைக்ரோஸ்கோப்பின் (microscope) அடியில் வைத்துப் பார்த்தால் எல்லாம் ஒன்றுபோல் இருக்கும். பழத்திற்கு ருசி உண்டு; பூவுக்கு வாசனை உண்டு; தளிர் பச்சையாக இருக்கும்; பட்டை காய்ந்து போனது; ஆனால் மைக்ரோஸ்கோப்பின் அடியில் தெரிவது அவற்றின் அடிப்படை அமைப்பு. அவை எல்லாம் ஒரே அமைப்பு. மேலும் சொல்லப்போனால், மரமும், அது வளரும் மண்ணும் ஒன்றே. மரம் ஒரே இடத்திலிருக்கிறது; மனிதன் நடமாடுகிறான். மரத்தையும், மனிதனையும் உற்பத்தி செய்தது மண். எனவே, மண்ணும், அது உற்பத்தி செய்த மரமும், மனிதனும் அடிப்படையில் ஒன்றேயாகும். அதே போல் நம் அக உணர்வுகள், புற நிகழ்ச்சிகள் என்கிறோம். அது நமக்குத்தான் வேறுபாடாகத் தெரிகிறது. புறமும், அகமும் ஒரு பெரிய சூழலின் பகுதிகளே. எனவே அகமும், புறமும் ஒன்றே. அகத்தில் இருப்பதே புறத்தில் தெரிகிறது. அகத்தை உணர முடியாதவன், புறத்தைப் பார்த்து அகத்தை உணர்ந்து கொள்ளலாம்.

கண்ணாடி முகத்தைப் பிரதிபலிக்கிறது. புற நிகழ்ச்சிகள் அக உணர்வைப் பிரதிபலிக்கின்றன. பல நாட்கள் கழித்து வரப்போகும் பெரிய நல்ல செய்தியையும், கெட்ட செய்தியையும் புற நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனிப்பவரால் தெரிந்துகொள்ள முடியும்.

இரு கூட்டாளிகள். பணம் போட்டவர் ஒருவர். உழைப்பவர் ஒருவர். **Project** ஆரம்பித்த 12 மாதத்தில் 2 இலட்ச ரூபாய் முதல் 6 இலட்சம் இலாபம் சம்பாதித்தது. தகராறு வந்தது. கஷ்ட கூட்டாளி தாமே விலகிவிட்டார். விலகியவர் ஆசிரமச் சாப்பாட்டறையில் சாப்பிட வரிசையில் வந்து நின்றார். தோளில் ஒருவர் கைவைத்து அவரை அழைத்து, கையில் கொஞ்சம் பாதாம் அல்வாவைக் கொடுத்து, ‘‘அன்னை-யிடமிருந்து வந்தது; பிரசாதம்; சாப்பிடுங்கள்’’ என்றார். 11-ஆம் நாள் பணம் போட்டவருடைய குடும்பத்தலைவர், கூட்டாளிகளுக்குள் நடந்ததைக் கேள்விப்பட்டு **Project**-ஐ



கஷ்டக் கூட்டாளிக்கே கொடுக்கும்படிப் பணம் போட்டவரைப் பணித்தார். அன்னையிடமிருந்து வந்த பிரசாதம் அவர் மனநிலையைப் பிரதிபலித்தது. கூட்டாளிகளுக்குள் பிணக்குக் கூடாது என்ற மனநிலை அன்னையின் பிரசாதத்தில் பிரதிபலிக்கிறது. அன்னையின் பிரசாதமாக அவருக்கு முழு **Project** கிடைத்தது.

பெரிய விஷயங்களில் அக உணர்ச்சியைப் புற நிகழ்ச்சிகள் பிரதிபலிப்பதை உணர ஆரம்பித்து, எல்லா நிகழ்ச்சிகளையும் அது போல் புரிந்துகொள்ள ஆரம்பித்து, கடைசியில் மிகச்சிறிய நிகழ்ச்சிகளுக்கும் அதே போல் விளக்கம் தெரிந்துகொண்டால், ஒரு வகையில் யோகத்தை முழுமையாகப் புரிந்து-கொண்டதற்குச் சமம். ஒருவருக்கு வாய் தெற்றும் **(stammering)**. அவர் யாரைப் பார்த்தால் வாய் அதிகமாகத் தெற்றுகிறது, யாரைப் பார்த்தால் குறைவாகத் தெற்றுகிறது என கவனிக்க ஆரம்பித்தால், இந்த படிப்பினையே அவருடைய தெற்றுவாயை முழுவதுமாகக் குணப்படுத்த உதவும்.

நாம் இருக்கும் இடம், நாம் பழகும் நபர்கள், மனத்தில் எழும் எண்ணங்கள், ரோட்டில் போகும்பொழுது கண்ணில் படும் காட்சிகள், காதில் விழும் சொற்கள், ஆகிய அனைத்தையும் கவனித்துப் பார்த்தால், அவற்றுக்குள்ள தொடர்பு தெளிவாகத் தெரியும். நம் மனம் பதட்டமாக இருந்தால், கண்ணில் படும் காட்சிகள் சச்சரவாக இருக்கும். கண்ணில் தெரியும் தோற்றம் இனிமையானதானால், நம் எண்ணங்கள் விரும்பத்தக்கதாக இருக்கும். ஒருவர் இப்பயிற்சியை ஆரம்பித்துக் கூர்மையாகத் தம்மையும், நிகழ்ச்சிகளையும் கவனித்தால், அவருடைய செயல்கள் சிறப்படையும். அந்நிலைக்கு வந்தவருக்கு அவரை அறியாமல் எதுவும் நடக்க முடியாது. அவருடைய வாழ்க்கை அந்த அளவில் அவருக்குக் கட்டுப்படும். அவரால் தம் வாழ்க்கையின் போக்கை நிர்ணயிக்க முடியும். இது ஒரு பெருந்திறன்.

தொடரும்...

## அன்பர் அனுபவம்

S. செல்வரசி, திண்டுக்கல்

என் பெயர் செல்வரசி. நான் திண்டுக்கல் தியான மையத்தின் பொறுப்பாளர் வீட்டில் வேலை செய்து வருகிறேன். எனக்குத் திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளனர். நான் எனது கணவருக்கும், மாமனாருக்கும் தெரியாமல் ரூ.100-க்கு ரூ.10 என்ற முறையில் கடன் ரூபாய் இரண்டு லட்சத்திற்கு வாங்கி-யிருந்தேன். இதனைத் திருப்பித் தர முடியாமல், என் குழந்தைகளையும், குடும்பத்தையும் விட்டுப் பிரிந்து மிகவும் கஷ்டப்பட்டு, அநாதை விடுதியில் சில காலம் தங்கியிருந்தேன். இவ்வாறு ஒரு ஐந்தரை ஆண்டுகள் ஓடின. அப்பொழுது என் குழந்தைகளையும், குடும்பத்தையும் நினைத்துக் கண்ணீர் விட்டுக் கதறிக் கொண்டிருப்பேன். அவர்களை மூன்றாம் மனுஷி மாதிரி தூரத்தில் மறைந்து நின்று பார்ப்பேன். எந்த ஒரு தாய்க்கும் என் மாதிரியான நிலை வரவேக் கூடாது. நான் வேண்டாத தெய்வமே இல்லை. திண்டுக்கல் தியான மையப் பொறுப்பாளர் ஜீவா அம்மா வீட்டில் வேலைக்குச் சேர்ந்தேன். ஜீவா அம்மாவிடம் ஒருநாள் என் பிரச்சனையைக் கூறினேன். அவர்கள், அன்னையைப் பிரார்த்தனை செய்யும்படியும், அன்னையைத் தவிர வேறு யாரிடமும் கூறாமல், நினைவு வரும் பொழுதெல்லாம் அன்னையிடம் மட்டும் கூறு என்றும் கூறினார்கள். அவர்களால்தான் இதைத் தீர்க்க முடியும் என்றும் கூறினார்கள். அப்பொழுது நான் அவர்கள் வீட்டில் வேலைக்குச் சேர்ந்து நான்கு மாதங்களே ஆகியிருந்தன. அன்னை மீது முதலில் எனக்கு நம்பிக்கை எழவில்லை. பிறகு அங்கே உள்ள சூழ்நிலை அனைத்தையும் பார்த்து சற்று நம்பிக்கையுடன் நாள்தோறும் அன்னைமுன் என் பிரச்சனையான கடனைப்பற்றி மனம் உருகிக் கூறி அழுவேன்.

என்ன ஒரு அதிசயம்! அன்னை என் கடனைக் கட்ட வழி காட்டினார்கள். அன்னை என் மாமனார் மனதை மாற்றி அவர் மூலமாக என் கடன்கள் எல்லாம் கட்ட வழி காட்டினார்கள். முதலில் என் மாமனார் கடனைத் தான் அடைக்க மாட்டேன் என்று கூறினார். யாரைக் கேட்டு இவ்வளவு கடன் வாங்கினாய்? இதற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று கூறி-விட்டார். ஆனால் அவரே முன்வந்து என் கடன்களை எல்லாம் கட்டியது அன்னையால்தான் என்று நினைக்கும் பொழுது என்னால் அழாமல் இருக்க முடியவில்லை. யாராலும் செய்ய முடியாத இந்த அதிசயத்தை அன்னைதான் நிகழ்த்தினார் என்பதில் எனக்கு எந்தவித சந்தேகமுமில்லை. மேலும் ஐந்தரை ஆண்டுகளாக நான் பட்ட பிரச்சனை, அன்னையைப் பிரார்த்திக்க ஆரம்பித்ததும் இப்படியொரு அதிசயமான வழியில், இவ்வளவு விரைவில் தீரும் என்று நான் நினைக்கவே இல்லை. நம்பிக்கையோடு அன்னையிடம் கேட்டேன். அன்னையும் நான் கேட்டதைக் கொடுத்து, என்னை என் குடும்பத்துடன் சேர்ந்து வாழ வழியும் செய்தார்கள். அன்னை-யிடம் நமக்கு வேறெதுவும் தேவையில்லை, நம்பிக்கை மட்டுமே போதும் என்பது எனக்கு நன்கு விளங்கியது.

அன்னைக்கும், திருமதி. ஜீவா இன்பராஜன் அவர்களுக்கும் என் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றிகள் ஆயிரம்!

### ஜீவிய மணி

அன்னை சத்திய ஜீவியத்தைக் கொடுத்தால் சற்றே உயர்ந்த மனித ஜீவியமாக நாம் பெறுகிறோம். அமரத்துவத்தைக் கொடுத்தால் நீண்ட ஆயுளாகப் பெறுகிறோம். கர்மமில்லாத வாழ்வானது நமக்கு என்றால், முக்கிய காரியங்களில் கர்மத்தை விலக்கிக் கொள்கிறோம். தோல்வியே இல்லாத வெற்றியை வழங்கினால், செய்யும் காரியத்தில் அதை ஒரு முறை வெற்றியாகப் பெறுகிறோம். சோகமே இல்லாத வாழ்வைச் சோகம் குறைந்த வாழ்வாக நாம் அடைகிறோம்.

# பொறுப்பை என்னிடம் விட்டுவிடு

இல. சுந்தரி

விதவிதமான மணி வகைகளைக் கொண்டு பெண்கள் அணியும் நவீன அணிகளைத் தயாரித்து மொத்த வியாபாரக் கடையில் கொடுத்து பணம் பெற்று வந்தாள் கல்யாணி.

இவளும், இவள் கணவனும் மற்றும் இரண்டு குழந்தைகளு-மாகிய இவள் குடும்பத்திற்கு இவள் கணவனின் வருவாய் போதுமானதாக இல்லை.

எனவே, இவள் கணவன் இவளிடம், ''உனக்குத்தான் கைவினைப் பொருட்கள் செய்வதில் திறமையும் ஆர்வமும் உள்ளதே, அதற்கான மூலப் பொருட்களை கடனில் வாங்கி வருகிறேன். நீ பொருட்களைத் தயாரித்தபின் அவற்றை எனக்குத் தெரிந்த மொத்த வியாபாரக் கடையில் கொடுத்துப் பணம் வாங்கி வருகிறேன். சிறிது சிறிதாகக் கடனையும் அடைத்து, பணம் கொடுத்தே மூலப் பொருட்கள் வாங்குவோம். தொழில் சூடு பிடித்தால் வருவாய் பெருகும்'' என்றான்.

கல்யாணிக்கும் அது சரி என்றே தோன்றியது. தன் குடும்ப நலனுக்குத் தானும் உதவ முடியும் என்று ஆர்வப்பட்டாள்.

அதன்பிறகு வீட்டின் ஓர் அறையை அதற்கென்று ஒதுக்கி அதில் தேவையான பொருட்களைச் சேகரித்து வைத்து, வீட்டு வேலை நேரம் போக மற்ற நேரங்களில் அணி வகைகளை நவீனமாய்த் தயாரித்தாள். அவற்றை அவள் கணவன் தனக்குத் தெரிந்த கடையொன்றிற்குச் சென்று காண்பிக்க, கடைக்கார-ருக்குப் பிடித்து விட்டது. முன்பணம் கொடுத்து மேலும் தயாரிக்கச் சொல்லிவிட்டார்.

கல்யாணியும் கிடைத்த நேரத்திலெல்லாம் விதவிதமான பெண்கள் அணியும் காதணி, கழுத்தில் அணியும் அணி, கால் கொலுசு என்று தயாரித்தாள்.

கடை முதலாளி பொருட்களைப் பார்வையிட்டு வாங்கிவர ஒரு சூப்பர்வைஸரை அனுப்பிவைத்தார். அவரும் அவ்வப்போது



வந்து பொருட்களை வாங்கிக் கொண்டு ஏதேனும் குறை சொல்லிப் போவார்.

தான் அதிகப்பணம் கேட்டு விடக்கூடாது என்று அவர் ஏதேனும் குறை கண்டுபிடிப்பது அவளுக்குத் தெரிந்தது. இருந்தாலும் தொழிலை நிலைநாட்டாதவரை அவரை எதிர்த்துப் பேசக்கூடாது என்று பொறுமையாயிருந்தாள்.

மேலும், மேலும் நிறைய செய்ய வாய்ப்பு வந்ததால் அதிக நேரம் ஒதுக்கிச் செய்ய ஆரம்பித்தாள். அன்றிரவு ஒரே கைவலி. இவள் வலக்கையை அதிகம் பயன்படுத்துவதால் வலது தோள்பட்டை முதல் வலது உள்ளங்கை வரை ஒரே வலி. மேலும் அணிகள் செய்ய முடியாத நிலை.

வலி நிவாரணி மருந்துகள் தேய்த்தும் வலி குறையவில்லை. தொழில் சூடுபிடிக்கும் நேரத்தில் கைவலி தடையாக வந்தது கண்டு வருந்தினாள்.

அப்போது அவள் தோழி கமலா வந்தாள். அவளிடம் தன் புதிய முயற்சியைக் கூறித் தான் தயாரித்துள்ள அணி வகை-களை அவளுக்குக் காண்பித்தாள். அவளும் பார்த்துவிட்டு எல்லாம் மிக நன்றாகவுள்ளதாகக் கூறிப் பாராட்டியதுடன், தனக்கும் சில அணிகளைப் பணம் கொடுத்து வாங்கிக் கொண்டாள். அவள் மேலும் இத்தொழில் மூலம் வளம் பெற வேண்டும் என அன்புடன் கூறினாள்.

அப்போது கல்யாணி தன் கை வலியைப் பற்றிக் கூறி, தொழிலைத் தொடர முடியுமா என்ற தன் கவலையைக் கூறி வருந்தினாள்.

பொறுப்புணர்வும், திறமையும் கொண்ட தன் தோழிக்கு உதவ வேண்டிய அவசியத்தைக் கமலா உணர்ந்தாள். மேலும் உதவ இதுவே தக்க தருணம் என்றும் கருதினாள்.

'கவலைப்படாதே கல்யாணி, என்னால் உனக்குப் பொருளு-தவியோ, உடல் உழைப்பால் உதவியோ செய்ய முடியாது. ஆனால் ஆன்மீக ரீதியாக உதவ முடியும். ஆனால் அதில் உனக்கு நம்பிக்கை வேண்டும்' என்றாள்.

'ஆன்மீகரீதியாகவா? என்ன சொல்கிறாய்' என்று புரியாமல் கேட்டாள் கல்யாணி.

‘ஆம் என்னிடம் ஒரு மருந்து இருக்கிறது. அது உன் கைவலியைப் போக்கிவிடும்’ என்றாள்.

‘அப்படியா? அதைக் கொடு. கைவலி போய்விட்டால் இந்த வாரம் முடித்துத் தர வேண்டிய ஆர்டரை முடித்துவிடுவேன்’ என்றாள்.

‘நான் மருந்து என்றது மேலே தடவிக் கொள்ளும் களிம்போ, உள்ளுக்குச் சாப்பிடும் மாத்திரையோ அன்று. அதுவொரு சக்தி. உழைப்பாளிகள், அறிவாளிகள், பக்தர்கள் மனம் ஒன்றி அழைத்தால் வந்து உதவும் சக்தி’ என்றாள்.

‘சக்தியா?’

‘ஆம். அதுவொரு சக்தி. அதன் பெயர் சத்திய ஜீவிய சக்தி. அது நேர்மைக்கு, உண்மைக்கு மிகவும் பலிக்கும் சக்தி. ஆர்வத்துடனும், நம்பிக்கையுடனும் அழைத்தால் அது வந்து உதவும்’ என்றாள்.

‘புதுமையாகவுள்ளது. இதுவரை யாரும் சொல்லிக் கேள்விப்-படாதது. குழப்பமாயுள்ளது. இருந்தாலும் இப்போது என் வலி பிரச்சனை தீர்ந்து வேலையை முடித்துத் தரவேண்டும். அது சரி கமலா, அந்தச் சக்திக்கு ஏதேனும் வடிவம் உண்டா? ஏனென்றால் அதன் முன் நின்று பிரார்த்திக்க, அழைக்க எளிதாயிருக்கும் என்றுதான் கேட்கிறேன்’ என்றாள்.

‘ஆம் கல்யாணி. அந்தச் சக்திக்கு ஒரு வடிவம் உண்டு. அதாவது நீ கூறியது போல் நினைத்துப் பிரார்த்திக்க எளிதாயி-ருப்பதற்குத்தான் அந்த வடிவம். இந்தா இதுதான் அந்த வடிவம்’ என்று தன் கைப்பையைத் திறந்து ஒரு திருவுருவப்படத்தை எடுத்து இவளிடம் கொடுத்தாள். அதைப் பெற்றுக் கொண்டதுமே ஒருவித நம்பிக்கையுணர்வு வருவதைக் கண்டாள்.

‘எப்படிக் கேட்டவுடன் கொடுத்தாய்?’ என்று வியந்தாள் கல்யாணி.

‘நான் கடும் காய்ச்சலால் மருத்துவமனையில் இருந்த போது சக்தியிழந்து தவித்தேன். அப்போது ஒரு பெரியவர் இதைச் சக்தி எனக் கூறி எனக்குத் தந்தார். அதைப் பிரார்த்தித்துத்தான்



சக்தி பெற்று பிழைத்தெழுந்தேன். அதிலிருந்து இந்தச் சக்தியின் உருவத்தை நான் என்னுடன் வைத்திருக்கிறேன்.’

‘எனக்கு இதைத் தந்துவிட்டாயே, உனக்கு? பரவாயில்லை கல்யாணி. இந்த வடிவம் இனி என் மனத்தைவிட்டு ஒருபோதும் அகலாது. நான் இந்த உருவத்தை என் நெஞ்சில் பதித்துக் கொண்டேன். இது சத்தியத்தின் சக்தி என்றும், உண்மைக்கு இது உதவும் என்றும் இதைக் கொடுத்தவர் கூறினார். அது உண்மை என்பதை என் சொந்த அனுபவத்தில் கண்டேன். உனக்கு இப்போது நேர்மையாய் உழைத்துப் பொருளீட்டும் வாய்ப்பு வந்திருக்கிறது. இப்படிப் பெறும் பொருள் அருளால் வரும் பொருள் என்றும் இதற்கு இந்தச் சத்திய சக்தி உதவும் என்பதும் எனக்குத் தெரியும். அடுத்தவர் வளர்ச்சியைக் கண்டு மகிழ்வதும் இந்தச் சக்திக்கு நாம் செலுத்தும் நன்றிதான் என்று அந்தப் பெரியவர் கூறியிருக்கிறார். இப்போது உனக்குச் சக்தி தேவை. உன் நேர்மைக்கும், உழைப்பிற்கும் இச்சக்தி உனக்கு உதவும். இப்போது நான் செல்கிறேன். பிறகு உன் வளர்ச்சியைக் கண் குளிரக் காணவருவேன்’ என்று அன்புடன் கூறி விடைபெற்றாள் கமலா.

கல்யாணி உற்சாகமானாள். அந்தச் சக்தியின் உருவத்தை கண்ணில் காணுமாறு ஓரிடத்தில் வைத்தாள். பிறகு கண்மூடி தனக்கு உதவ வரவேண்டும் எனப் பிரார்த்தனை செய்தாள். அன்றிரவு உறங்கி எழுந்ததும் வலியே இல்லை என்றுணர்ந்தாள். சக்தியே, என் வலக்கை உன் சக்தியால் நிறைந்து குணமாகி-விட்டது என்று நன்றி கூறிப் பணியைத் தொடர்ந்தாள்.

என்ன வியப்பு! விரைவாக அவளால் பல அணிகள் வகை-வகையாய்த் தயாரிக்க முடிந்தது. மறுநாள் பார்வையிட வந்த கடை சூப்பர்வைசர் என்றும்போல் எந்தக் குறையும் கூறாத-துடன் சுவாரஸ்யமாய் பார்வையிட்டார். (நம் திறமை எவ்வளவு உயர்ந்ததாயினும் இறையருளோடு இணையும்போதுதான் சிறப்படைகிறது.) ‘மேடம், இம்முறை மிக வித்தியாசமாய் ரொம்ப நல்லாத் தயாரிச்சிருக்கீங்க. என்னால் குறை காண முடியல. இதற்கேற்ப அதிகப் பணம் கிடைக்க சிபாரிசு செய்வேன்’ என்று கூறி எடுத்துப் போனார்.

கல்யாணிக்கு மிகவும் மகிழ்ச்சி. அந்தச் சக்தியைத் தாங்கி வந்த திருவுருவத்தின் முன் நின்று நன்றி கூறி வணங்கினாள்.

ஆனால் அன்றிரவு இடக்கையில் வலி ஏற்பட்டது. இது என்ன வேதனை? குணமாகி விட்டோம் என்றல்லவா மகிழ்ந்தேன். இரண்டு கையும் வலியில்லாமல் தெம்பாக இருந்தால்தானே அணிகள் தயாரிக்க முடியும். அடுத்த வாரம் முடித்துத் தர வேண்டியவற்றை எப்படி முடிப்பேன் என்று நினைத்தவள் அந்தச் சக்தியை நினைத்து தன் இடக்கையும் வலி நீங்கி குணமாக வேண்டும் என்று பிரார்த்தித்த வண்ணம் தூங்கி விட்டாள்.

காலை எழுந்திருக்கும் போது சுத்தமாக வலியே இல்லை. இரண்டு கைகளுமே நலமாகவே இருந்தன. பெரு மகிழ்வோடு புதிது புதிதாய் அணி வகைகள் செய்து குவித்தாள். ஒரே மகிழ்ச்சி.

ஆனால் திடீரென காலில் வலி ஏற்பட்டது. சில நேரங்களில் குறிப்பிட்ட மாடல் தயாரிக்க சுவரில் பொருத்தப்பட்ட பிளேட்டில் அணிகளை அமைக்க நீண்ட நேரம் நின்ற நிலையில் மணிகளைப் பொருத்த வேண்டியிருக்கும். தயாரித்தவைகளையும் அதற்கென அமைந்த போர்டில் பொருத்த வேண்டும். இந்நிலையில் கடும் கால் வலியால் செய்து முடித்தவற்றை போர்டில் பொருத்த முடியவில்லை. அடுத்தவாரம் சூப்பர்வைஸர் வருமுன் முடிக்க வேண்டும். கவலை எழுந்தது. உடனே மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, அந்தச் சத்திய சக்தியின் வடிவத்தின் முன்னின்று பிரார்த்தித்தாள். சக்தியே, உன்னை வேண்டிய பிறகு வலக்கை வலி, இடக்கை வலி யாவும் போயிற்று. முன்பு இருந்ததைவிட அதிக உற்சாகத்துடன் நிறைய அணிகள் தயாரிக்க முடிந்தது. பாராட்டும் கிடைத்தது. நிறைய பணமும் கிடைத்து கடன் அடைக்க முடிந்தது. ஆனால் இப்போது கால்வலியால் மேலும் பணிகள் பாதிப்படைந்தால் தொடர்ந்து எப்படித் தொழில் செய்வேன். ஏன் இப்படி ஒன்று மாற்றி ஒன்று வருகிறது. தயவு செய்து இந்தக் கால் வலியைப் போக்கிவிடு. அக்ஷய பாத்திரம் போல் உன்னை வைத்துக் கொண்டு நான் ஏன் கவலைப்படுகிறேன். உன்னிடம் சொன்னவுடன்தான் வலி போய்விடுமே. எனக்கு எவ்வளவு வேலையிருக்கிறது. இந்த நேரம் இந்த வலி என் வேலையை எப்படிப் பாதிக்கிறது என்பது நீ அறியாததா? தயவு செய்து காப்பாற்று என்று மனம் விட்டு நெருங்கியவரிடம் பேசும் தோரணையில் வாய்விட்டுப் பிரார்த்தித்தாள். வலி மறைந்தது. ஒரே மகிழ்ச்சி. உற்சாகத்துடன் மீதமுள்ள வேலைகளைச் செய்து முடித்துவிட்டு அடுத்துவரும் ஆர்டர்களை ஏற்றுக் கொள்ளத் தயாராகிவிட்டாள்.

அன்றிரவு தூங்கப் போகும் போது நடந்தவற்றையெல்லாம் நினைவுபடுத்திப் பார்த்தாள்.

தொழில் ஆரம்பித்துச் சிறப்படையும் போது வலி பிரச்சனை எழுந்தது. மனம் மிகவும் இடிந்து போனாள். தக்க சமயத்தில் தோழி வந்தாள். ஒரு அருமருந்தினைத் தந்தாள். மருந்து தேய்த்தும், மாத்திரை தின்றும் தீராத வலி பிரார்த்தனைக்குக் கட்டுப்பட்டது. ஆனால் வலக்கை வலிபோய் இடக்கைவலி வந்தது. அது போய் கால்வலி வந்தது என்று நினைக்கும் போது ஏனிப்படி மாற்றி மாற்றி வந்தது என்று நினைத்தாள். தான் செய்த பிரார்த்தனையை நினைவு கூர்ந்தாள். வலக்கை வலி போக வேண்டும் என்று வேண்டிக் கொள்ளும் போது, அது போனால் தன்னால் எல்லாம் முடியும் என்ற எண்ணம் இருந்தது. இடக்கை வலி வந்ததும் இடக்கை வலி போக வேண்டும் என்று வேண்டினாள். இரண்டு கைகளும் நன்றாக இருந்தால் தன்னால் எல்லாம் முடியும் என்ற எண்ணம் இருந்தது. பிறகு கால்வலி வந்த போது அது போனால்தான் வேலை செய்ய முடியும் என்ற நிலை வந்தது. பிரார்த்தனையில் அதுவும் நீங்கியது என்று நினைத்துக் கொண்டிருக்கும் போது அடுத்தது என்ன வருமோ என்ற பயம் வந்தது. உடனே அவள் பிரார்த்தித்த அந்தச் சக்தி அவளிடம் ஏதோ சொல்வது போல் தோன்றியது. ''ஏதோ ஒன்று கேட்டாய். அதைக் கொடுத்தால் போதும். பிறகு உன் தயவு தேவையில்லை. எல்லாம் நான் பார்த்துக் கொள்வேன் என்பது போல் பிரார்த்தித்தாய். எனவே, நீ கேட்கக் கேட்கக் கொடுக்கலாம் என்றிருந்தேன். நீயே எல்லாவற்றிற்கும் பொறுப்பு என்று முழுவதுமாய் என்னிடம் ஒப்படைத்திருந்தால் ஒவ்வொன்றாய் வரவிட்டிருக்கமாட்டேனல்லவா?'' என்று அந்தச் சக்தி

தன்னிடம் கூறுவது போல் தோன்றியது. ஐயய்யோ! அடுத்தது என்ன வருமோ தெரியவில்லை. நான் மீண்டும் அந்தத் தவற்றினைச் செய்ய மாட்டேன். சக்தியே யாவும் உன் பொறுப்பு என்று வாய் விட்டுக் கூறி பெரிதாய்ச் சிரித்து விட்டாள். அங்கு வந்த அவள் கணவன், 'இந்த இரவில் இப்படி சிரித்துக் கொண்டிருக்கிறாயே. உனக்கு என்ன ஆயிற்று? ஏதாவது மூளைக் குழப்பமா?' என்று கேலியாகக் கேட்டான். இவள் நடந்தவற்றை ஒவ்வொன்றாய்க் கூறினாள். 'சரிதான் நீ ஒவ்வொன்றாய்க் கேட்டு, இறுதியில் உன்னை முழுமையாய் அந்தச் சக்தியின் பொறுப்பில் கொடுத்துவிட்டாய். என்னையும் குழந்தைகளையும் அந்த வலி பிடித்துக் கொண்டால் என்ன செய்வது. நான் இப்போதே முழுமையாய் நம் குடும்பத்தை ஒப்படைத்து விடுகிறேன். இல்லையென்றால் உன்னை விட்டு நீங்கிய வலி எங்களைப் பிடித்துக் கொள்ளும்' என்று உண்மை-யாகவும், நகைச்சுவையாகவும் கூற இருவரும் சிரித்தனர். குழந்தைகள் விழித்துக் கொண்டனர். 'எதற்கு இப்படிச் சிரிக்கிறீர்கள் என்று கேட்டனர். உன் அம்மா கைவலி, கால்வலி என்று ஒவ்வொன்றாய்ப் பிரார்த்தித்தாள். நான் புத்திசாலித்-தனமாக நம் குடும்பம் முழுவதையும் காப்பாற்ற வேண்டும் என சுவாமியை வேண்டினேன்' என்றான் கணவன். உன் அம்மாவின் அறியாமையை நினைத்துச் சிரித்தோம் என்றான் கணவன்.

'ஐயய்யே, நீயும் அசடுதான் அப்பா. நாம் மட்டும் நன்றாக இருந்தால் போதுமா? பால்காரர், பேப்பர்காரர், வேலைக்காரர், கடைக்காரர் எல்லாரும் நன்றாக இருந்தால்தானே எல்லாம் கிடைக்கும். நாங்கள் எல்லோருக்காகவும் வேண்டிக் கொள்ளப் போகிறோம்' என்று குழந்தைகள் கூற, யாவரும் வாய்விட்டுச் சிரித்தனர்.

நாமும் பொறுப்பை அன்னையிடம் விட்டுவிடுவோம்.

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# 3 நாள் பிரார்த்தனை - அழைப்பு

பிரச்சனை தீர பிரார்த்தனை தேவையில்லை. அன்னையிடம் கூறினால் போதும், பிரச்சனை தீரும் என அன்பர்கள் அறிவார்கள். அதைக் கடந்த நிலைகள் பல உள. அவற்றில் ஒன்று, நமக்குப் பிரச்சனை ஏற்படும்முன் அன்னை அதை தீர்த்து விட்டதே உண்மை. நாம் அதை அறிவதில்லை. நமக்கு வந்து விலகிய பிரச்சனைகளையும் அவை தீர்ந்த வகையையும், அதற்குதவிய சந்தர்ப்பங்களையும் நினைவு கூர்ந்தால், தீர்வுக்கு வேண்டியவற்றை முன்கூட்டி அன்னை ஏற்படுத்தியதை அறியலாம். அதைக் கடந்த நிலை-யொன்றும் உண்டு. நாமே முயன்று வந்த வாய்ப்பை பிரச்சனையாக்கிய நிலையை நாமறியோம். நின்று நிதானித்து அதை நினைவு கூர்ந்தால், அடுத்த க்ஷணம் பிரச்சனையிருக்காது. அதைச் செய்யும் தெளிவோ, பொறுமையோ, அறிவோ நமக்கிருப்பதில்லை. அதனால் வளரும் பிரச்சனை மலரும் தீர்வாக முடிந்ததைத் தவறாது காணலாம். எதுவும் செய்ய முடியாமல் திகைத்துள்ள நிலையில் ஒரேயொரு முறை அன்னையை அழைத்தால் அது தீரும். ஏனெனில் அந்த நிலையில் குரல் ஆழத்தி-லிருந்து எழும். புதியதாக வந்த அன்பர்கள், பிரச்சனை-யால் அலைக்கழிக்கப்பட்டவர்கள், நிதானமிழந்தவர்கள், நல்லதைக் காண முடியாமல் கெட்டதை மட்டும் கண்டு நிலைகுலைந்தவர்கள், பிறரால் பீதியூட்டப்பட்டவர், பரம எதிரியை பரம குருவாகத் தொழுது அழிபவர், அன்னையை 50 ஆண்டுகளாக அறிந்து அவர் சூழலில் வாழ்ந்தும், 25 வருடமாக வயிற்றைக் கலக்கும் பீதியால் அவதிப்படுபவர் போன்றவர் ஏராளம். நான் அவர்கட்குக் கூறும் முறை

(தொடர்ச்சி பின்பக்க அட்டையில்)

(முன்பக்க அட்டை தொடர்ச்சி)

3 நாள் பிரார்த்தனை - அழைப்பு.

அதனால் பிரச்சனை தீர 3 நாள் பிரார்த்திக்க வேண்டும் என்பதில்லை. பிரார்த்தனை செய்யும் மனநிலை இந்த அவதிப்படும் அன்பருக்கு வர 3 நாள் பிரார்த்தனை தேவைப்படுகிறது. அந்நிலையில் எழுப்பும் ஒரு குரல் பிரச்சனையைத் தீர்க்கும். கடந்த 1000 ஆண்டுகளாக ரஷ்ய சரித்திரத்தில் பதவியிழந்தவன் மீண்டும் பெறவில்லை. கோர்ப்பஷாவ் பதவி இழந்த பொழுது 3 அன்பரின் 3 நாள் பிரார்த்தனை பதவியை மீண்டும் பெற்றுத் தந்தது. அன்பர் மனநிலைக்குக் குறைந்தபட்சம் அதிகபட்சம் என்றவை உண்டு. குறைந்தபட்ச மனநிலையில் பிரச்சனை தீர அன்னையை நினைத்தால் போதும். அதுவும் முடியாதவர்க்கே 3 நாள் பிரார்த்தனை. இன்று நம் நாட்டில் குறைந்தபட்ச வாய்ப்பு வறுமைக் கோட்டைக் கடப்பது. அதிகபட்ச வாய்ப்பு உலகில் 4-ஆம் நிலை செல்வந்தராவது என்று செய்தி கூறுகிறது.

அழைப்பு குறைந்தபட்ச மனநிலைக்கு
பிரச்சனையைத் தீர்க்கும்.

அழைப்பு அதிகபட்ச மனநிலையில்
யோக வாய்ப்பைப் பூர்த்தி செய்யும்.

வாழ்வில் யோகம் என்றால் அதிர்ஷ்டம் எனப் பெயர். யோகத்தை மேற்கொள்பவர் வாழ்வு யோகமாகும். அது தெய்வீக வாழ்வு, யோகத்தைத் தவிர்த்து வாழ்வை அன்பர் நிலையில் ஏற்பவருக்கு அதிகபட்ச மனநிலை நின்று எழுப்பும் 3 நாள் அழைப்பு

''அன்பு அமிர்தமாகி அனந்தம் அபரிமிதமாவதின்''
இலட்சியத்தைப் பூர்த்தி செய்யும்.